திருவாசகம் - 07

# திருவெம்பாவை கதைவடிவில்

கே. வி. குணசேகரம்



வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

திருவெம்பாவையை எழுதும்போது மிகுந்த சிரமப்பட்டேன். அதற்குக் காரணம் அது கூறும் தத்துவங்களைக் கதைகளாக்க முடியுமா என்ற கலக்கம்தான். எண்ணிக்கையற்ற தமிழ் சைவத் தத்துவப்பாடல்களைச் சிரமமின்றி எழுதி முடித்த எனக்குத் திருவெம்பாவை தடுமாற்றத்தைக் கொடுத்தது. எழுதிமுடித்த பின்பும் திருத்தங்கள் பலவும் செய்தேன். இருப்பினும் மனநிறைவு உண்டாகவில்லை. யாராவது திருவெம்பாவையைப் பற்றித் தெரிந்தவர்கள் கூறினால் திருத்தலாம். ஆனால் யாரும் கூறமாட்டார்கள். ஏனென்றால் பலர் பொருள் விளங்காமல்தான் பாடுகிறார்கள், பேசுகிறார்கள், பாட்டும் பேச்சும் அவை பாடியபின்பும், பேசிய பின்பும் காற்றோடு கலந்துவிடும். யாருக்கும் நினைவிராது. ஆனால் எழுத்து உலகம் உள்ளவரை வாழும். இதையாவது உணர்ந்தால் விமர்சிக்கவும்.

எனது தந்தை பெரும் பக்தர். அவர் கோவிலில் திருவிழாக் காலங்களில் பல்வேறு வேடமிட்டு ஆடிப்பாடுவார். திருவெம்பாவைக் காலத்தில் வீதி வீதியாகச் சென்று பாடல்களைப் பாடிச் சங்கை ஊதுவார். அதனால் மக்கள் விழித்தெழுவர். இதை அவர் பல்லாண்டுகளாகச் செய்து வந்த அவர் 1987ஆம் ஆண்டு தீபாவளித் தினத்தன்று அகாலமரணமானார். அவரின் நினைவாக இத்திருவெம்பாவையைக் கதை வடிவில் வெளியிடுகிறேன். இதை விமர்சித்தால் பின்பு நூலாக வெளியிடுவேன்.

விமர்சனம் என்பது பாடலின் கருத்தையும், தத்துவத்தையும் சந்தேகமின்றி விளங்கிக் கொள்ளல் வேண்டும். பின் அப்பாடலுக்கு எழுதப்பட்டகதை பொருத்தமானதா என்று ஆராய்தல் வேண்டும். பின் இரண்டையும் உற்று நோக்க வேண்டும். இரண்டையும் விளங்கிக் கொண்ட பின்பு விமர்சிக்க வேண்டும். இதுவரை மனதில் எழாத சந்தேகம் எழுந்ததால் இதை எழுதுகிறேன். இனி விமர்சிக்கவும்.

நன்றி.

அன்புடன்

***கே. வி. குணசேகரம்***

உ

சிவமயம்

# திருவெம்பாவை கதைவடிவில்

## திருவண்ணாமலையில் சக்தியை வியந்து பாடியது

தை மாதம் முதல் ஆனி மாதம் வரையிலான ஆறு மாதங்கள் உத்தராயண காலம் எனப்படும். இக்காலம் தேவர்களுக்குப் பகலாகும். ஆடி மாதம் தொடக்கம் மார்கழி வரையான காலம் தட்சணாயன காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இரவாகும். எமக்கு இக்காலத்தில் அதிகாலை நான்கு மணியில் இருந்து ஆறு மணிவரை பிரமமுகூர்த்தமாகும். சிவனை வழிபட இவ்வேளை மிகமிக உயர்ந்த வேளையாகும். இக்காலம் தேவர்களுக்கும் பிரமமுகூர்த்தமாகும். அதனால் மாதங்களில் மிகமிகச் சிறந்த மாதமென மார்கழியைக் கொள்வர். மார்கழி மாதத்தில் மக்கள் அதிகாலையில் எழுந்து நீராடி சிவனை வணங்குவதற்காகக் கோவில்களுக்குச் செல்வர். இவ்வேளையில் பெண்கள் திருவெம்பாவைப் பாடல்களைப் பொருளுணர்ந்து இசையோடு வீதியாகப் பாடிச்சென்று தமது வீடுகளில் சிவனை வணங்கத் தயாராகச் சிவநினைவோடு இருக்கும் தோழிகளை அழைத்துச் செல்வர். இப்பதிகம் திருவண்ணாமலையில் பாடப்பெற்றது. சிவனை வழிபட்டுச் சிவனது திருவடியை அடைய இப் பதிகம் வழிவகுக்கிறது.

1. **ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்**
**சோதியை யாம்பாடக்கேட்டேயும் வாள்தடங்கள்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து**
**போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே**
**ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்.**

மாதுமையும் சிவதர்சினியும் இணைபிரியாத அன்புத் தோழிகள். இருவரும் மைத்துனிகள். ஒரே வருடத்தில் பிறந்தவர்கள். அதனால் ஒரேவகுப்பில் படித்து முடித்துவிட்டுத் திருமணத்திற்காகக் காத்திருக்கின்றனர். சிவதர்சினி அமைதியானவள். யாருடனும் கலகலப்பாகப் பேசாதவள். ஆனால் மாதுமை வாய் ஓயாது தனது தோழிகளைச் சண்டைக்கிழுத்து வேடிக்கை பார்ப்பவள்.

சிவதர்சினிக்கு மாதுமையின் மூத்த சகோதரனான கணேசனைத் திருமணம் செய்வதாக இருவீட்டாரும் அவள் பிறந்ததன்றே தீர்மானித்திருந்தனர். எனினும் சிவதர்சினியும் கணேசனும் பேசியது கிடையாது. இயன்றளவு இருவரும் சந்திப்பதைத் தவிர்த்து வந்தனர்.

சிவதர்சினிக்குக் கணேசனைத் திருமணம் செய்வதென்று தீர்மானித்த போதும் அவளுக்கு கணேசன்மீது பெரிதாக ஈர்ப்பில்லை. அவனைச் சந்திக்க வேண்டும். அவனோடு கதைக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் உண்டாவதில்லை. அவள் பெரும் சிவபக்தை. சிவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பாள். மாதுமையும் சிவபக்தைதான். இருப்பினும் அவள் வீண்வம்பு பேசுவதில் வல்லவள். யார் யாரைக் காதலிக்கிறார்கள். யார் யாருடன் சண்டை பிடித்திருக்கிறார்கள் என்ற விபரங்கள் யாவும் அவளுக்குத் தெரியும். அதனால் சிவதர்சினி மாதுமையோடு சற்று விலகியிருப்பாள். கடந்த நாலைந்து தினங்களாக மாதுமையின் போக்கில் மாறுபாடு தெரிந்ததை சிவதர்சினி உணர்ந்தாள். என்னவாக இருக்கும் என்பதை அவளால் ஊகித்தறிய முடியவில்லை. எந்த நேரமும் யோசித்துக் கொண்டிருப்பாள். தனக்குள் பேசுவாள். காரணமின்றிச் சிரிப்பாள். இவற்றைக் கவனித்தபோதும் அவள் அதைப்பற்றி அவளிடம் கேட்கவில்லை. கேட்டாலும் உண்மையைச் சொல்லமாட்டாள் என்று சிவதர்சினிக்குத் தெரியும். அதனால் மாதுமையின் தோழியான அர்ச்சகாவின் வீட்டிற்குச் சென்றாள். அர்ச்சகா சிவதர்சினியின் தகப்பனின் சகோதரனின் மகள். இருவரும் நண்பிகள். இருப்பினும் சிவதர்சினி அர்ச்சகாவுடன் தான் அதிகமாகப் பேசி மகிழ்வாள்.

“வாடி, நான் உன்னைச் சந்திக்க வேண்டும் என்று நினைத்தனான். நீயே வந்துவிட்டாய். மாதுமையைப் பற்றி உனக்குச் சொல்ல வேண்டும்” என்று நிறுத்தினாள் அர்ச்சகா.

“அதைப்பற்றிப் பேசத்தான் நான் உன்னைத்தேடி வந்தேன். நேற்று திருவெம்பாவை பூசை ஆரம்பித்துவிட்டது. காலையில் நாம் நீராடிவிட்டு வீதிவழியாகச் சென்று மாதுமையை அழைத்தபோது அவள் நித்திரை விட்டெழவில்லை. நான் பாடினேன்; “தொடக்கமும் முடிவுமில்லாத அரும்பெரும் சோதியாகிய சிவனுடைய மகிமையை நாங்கள் பாடிக்கொண்டு வருகிறோம். ஆனால் இவ்வளவு காலமும் எம்மோடு சேர்ந்து வீதிவழியாகச் சிவனைப்

போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டு வந்த நீ இன்று ஏன் உறக்கத்திலிருந்து விடுபட முடியாதிருக்கிறாய்…? ஒளி பொருந்திய அழகான அகன்ற கண்களையுடையவளே, இன்னமும் ஏன் தூங்கிக் கொண்டிருக்கின்றாய். உனது காதுகள் மிகவும் கூர்மையானவை. ஒரு குண்டூசி நிலத்தில் விழுந்தாலும் உனக்கு அது கேட்கும். மகாதேவனுடைய மாட்சிமைகளைப் பாடக்கேட்ட அர்ச்சகா திடீரென்று எழுந்தாள். உணர்ச்சிவசப்பட்டுக் கண்ணீர் சொரிந்தாள். விம்மி அழுதாள். பரவசமடைந்தாள். மிகவும் சொகுசாச மலர்களைத் தூவிய படுக்கையில் படுத்திருந்த அவள் எழுந்து கட்டைபோல உணர்ச்சியில்லாமல் நின்றாள். இதுதான் சிவனை உணர்ந்த பரவசநிலை. பாவை போன்ற எனது தோழியே இன்று உனக்கு என்ன நேர்ந்தது..? இந்தநிலையில் இருந்த உனக்கு இன்று என்ன நேர்ந்தது சொல். மீண்டும் அந்த நிலையை அடை. இப்போ வேறு ஏதோ நினைவால் மனம் மாறியுள்ளாய். உனது மனமாற்றத்தை விடுத்துப் பரஞ்சோதியான சிவனை நினைத்துப் பரவசப்படு” என்று சொன்னேன். அவள் அதைக் கேட்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஒப்புக்குச் சிவனைப் போற்றியவாறு எம்முடன் வந்தாள். அவளது உற்ற தோழி நீ. உனக்கு அவள் எதையும் சொல்லாமல் விடமாட்டாள். அதனால் அவளின் நன்மை கருதிச் சொல். அவளைப்போய் பிசாசு பிடித்ததா….? அல்லது ஏதாவது பெரும் துன்பத்துக்குள்ளாகிவிட்டாளா…? அல்லது ஏதாவது நோய் வந்துவிட்டதா…? நீ சொன்னால் தான் அவளுக்குப் பரிகாரம் செய்ய முடியும்” என்றாள் சிவதர்சினி.

“எதையும் அவள் வாய்விட்டுச் சொல்கிறாளில்லை. ஆனால் அவளது மனதை ஏதோ ஒன்று பாதித்துள்ளது. அதிலிருந்து அவளை மீட்கவேண்டுமானால், அவள் தனக்கேற்பட்ட அந்த நிகழ்வைச் சொல்ல வேண்டும். எப்படிக் கேட்டாலும் சொல்கிறாளில்லை. பொதுவாக மனிதர்கள் எல்லோரும் உலக வாழ்க்கையை நிசமானது என்றெண்ணி அதனையே விரும்பி ஏற்று உண்மைநிலை புரியாது அவதிப்படுகின்றனர். அவர்களுக்கு உலகியல் விசயங்கள் இனிப்பாகவும், தெய்வீக விசயங்கள் கசப்பாகவும் இருக்கின்றன. அருளாளர்கள்தான் சிவனை நினைந்து உருகுவார்கள். சிவனை அடைய முயற்சிப்பார்கள். உலக இன்பங்களில் நாட்டமுடையவர்கள் கடவுளை வணங்குவதையே பெரும் சுமையாகக் கருதுவர். சிலர் தாம் பெரும் சிவபக்தர்களென நடப்பர். ஆனால் செயற்பட மாட்டார்கள். இப்போ மாதுமைக்குச் சிவனில் உள்ள ஈடுபாடு குறைந்துவிட்டது. அவள் உலகியலை மெய்யென்று நினைத்து அதைச் சுவைக்க விரும்புகிறாள்.” என்றாள் அர்ச்சகா.

“அப்படித்தான் நானும் நினைத்தேன். சில விடயங்கள் நண்பர்களுக்குக்கூடத் தெரியக் கூடாதென்று சிலர் நினைப்பர். மலிந்தால் சந்தைக்கு வரும் என்பார்கள். எனக்கு ஒரு விடயத்தில் சந்தேகம் இருக்கு. அதைப்பற்றி இப்போது கேளாதே. யாவற்றையும் உறுதி செய்தபின் சொல்கிறேன்” என்றாள் அர்ச்சகா.

**2. பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல்நாம்**

**பேசும்போ தெப்போ (து) இப் போதார் அமளிக்கே**

**நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்**

**சீசி இவையுஞ் சிலவோ விளையாடி**

**ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்கு**

**கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்**

**தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்**

**ஈசனார்க் கன்பாயாம் ஆரேலோர் எம்பாவாய்.**

அர்ச்சகாவும் சிவதர்சினியும் மாதுமையின் வீட்டக்கு வந்தனர். முற்றத்தில் நின்ற வேப்பமர நிழலில் நாற்காலிபோட்டு உட்காந்திருந்த மாதுமை வானத்தைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள். சிவதர்சினி படலையைப் பலமாக அடித்துச் சாத்தினாள். மாதுமையின் வீட்டு நாயான வைரவன் பலத்த கோபத்துடன் குரைத்துக்கொண்டு ஓடிவந்தது. அது சிவதர்சினியைக் கண்டதும் குரைப்பதை நிறுத்திவிட்டு மகிழ்வுடன் ஊளையிட்டது. சிவதர்சினி வேப்பமரத்தின் கீழிருந்த மாதுமையின் கவனத்தைத் திசை திருப்பவே படலையைப் பலமாக அடித்துச் சாத்தினாள். அச்சத்தம் கேட்டுக் கோபத்துடன் குரைத்து வந்த வைரவனின் பலமான குரைப்புச் சத்தமும் மாதுமைக்குக் கேட்கவில்லை. மாதுமையின் அருகில் வந்த சிவதர்சினி ‘மாதுமை’ என்று அவளது காதுக்குள் பலமாகக் கத்தினாள். “ஐயோ என்று அலறியபடி எழுந்த மாதுமை மிரளமிரள விழித்தாள். அர்ச்சகா சொன்னாள்; “உன்னுடைய போக்கு முற்றாக மாறிவிட்டது. விடியற்காலையில் எழுந்து சிவனைப் போற்றமுடியாமல் தவிக்கிறாய். எம்முடன் கலகலப்பாகப் பேசி எத்தனை நாட்களாகிவிட்டன. முன்பென்றால் உனது அலட்டல் தாங்கமுடியாமல் எழுந்து ஓடுவோம். இப்போ எம்மைக் கண்டால் பேயைக் கண்டவள்போல் மிரள்கிறாய். உனக்கு என்ன நடந்தது…? இரவு வேளையில் உன்னை வெளியே செல்ல விட மாட்டார்கள். வெளியே

சென்றிருந்தாலாவது பேய் பிசாசு பிடித்திருக்கும். திருவெம்பாவை தொடங்கினால் சோதி சொரூபமாக இருக்கும் சிவனைப் பற்றி நாம் பேசும்போதெல்லாம் அதில் கலந்து சிவனது அருட்செயல்களைப் பற்றி வாயோயாமல் பேசுவாய் அவன் தான் எனது உடைமை; உயிர்; என் நினைவு என்றெல்லாம் சொல்வாய். அருமையான அழகும், பெறுமதி மிக்க ஆபரணங்களை அணிந்த எனது அன்பே மாதுமை, இப்போது ஏன் எல்லாவற்றையும் மறந்தாய். படுக்கை இனிக்கிறதோ..? முன்பில்லாதவாது படுக்கை. இனிக்கக் காரணம் என்னடீ…? அர்ச்சகர் மாதுமையின் கன்னத்தைக் கிள்ளினான்.

சிவதர்சினி சொன்னாள்; "அழகிய ஆபரணங்களை அணிந்திருக்கும் அர்ச்சகாவே, இப்படியான போலியான பேச்சுக்களைப் பேசாதே. இது வேடிக்கையாகப் பேசும் வேளையல்ல. திருவெம்பாவை தொடங்கியதால் நாமெல்லாம் புனிதர்களாக இருத்தல் வேண்டும். சிவநினைவைத் தவிர வேறு நினைவுகள் மனத்தில் இருத்தலாகாது. சிவனைப் போற்றுவதைத் தவிர வேறெதையும் பேசக்கூடாது. விண்ணவர்கள் சிவனைப் போற்றத் தாம் தகுதியற்றவர்கள் என்றெண்ணிப் பின்வாங்குகின்றனர். பெருமைகள் மிக்க சிவலோகநாதனான தில்லைச் சிற்றம்பலத்து ஈசன் நமக்குள் வந்து காத்துக் கொண்டிருக்கிறான். அப்படியான வேளையில் அவனைப் பற்றிய சிந்தனை சிறிதும் இல்லாது வீண் வார்த்தைகள் பேசலாமா…? இப்படிப் பேசும் நாம் சிவனை அன்போடு போற்ற வல்லவர்கள் தானா என்று சிந்தித்துப் பாருங்கள். இப்போதைக்கு வேறு பேச்சுக்களைப் பேசாது சிவனைப் போற்றுங்கள். பின்பு நான் சொல்வது சரியா என்று நினைத்துப் பாருங்கள். எதைச் சொன்னாலும் அந்த நேரம் கேட்டுவிட்டுப் பின் மறந்து விடும் இயல்பை மாற்றுங்கள். என்றும் இன்பம் தரும் இறைவனைப் போற்றுங்கள்" என்றாள் சிவதர்சினி.

"சிவதர்சினி சொல்வது சரி. புனிதமான இந்த நாளில் சிவனைப் போற்றுவதைத் தவிர வேறு எதையும் செய்தல் ஆகாது. நாம் சொல்லிக் கொண்டே இருக்கிறோம். நீ கேட்டதாகத் தெரியவில்லை" என்று அர்ச்சகா மாதுமையின் தோளைப் பற்றி உலுப்பினாள்.

"விடடீ, மனதில் சில எண்ணங்கள் புகுந்து வெளியேற மறுக்கின்றன. அதனால் எனது மனம் பரபரக்கிறது. ஒரு நிலையில் நில்லாது தவிக்கிறது. ஒவ்வொருவருக்கும் இத்தகைய துன்பம் வந்தால்தான் புரியும்" என்று மாதுமை

சொன்னபோது அர்ச்சகா குறுக்கிட்டுச் சொன்னாள்; "உனக்கென்ன பிரச்சினை என்று எமக்கச் சொன்னால்தானே தெரியும். சொல்லு உனது மனம் தைரியப்பட வேண்டிய நடவடிக்கையை நாம் எடுக்கிறோம். முன்பு நீ சொல்வாய் சிவனை பற்றற்று நினைத்தால் வந்த துன்பங்கள் யாவும் பறந்துவிடும். சிவனுக்கு ஒரு பூவை வைத்து ஐந்தெழுத்தை ஓதிவந்தால் துன்பமே வராது" என்பாய். இப்போ சிவனை நினைக்க முடியாத அளவிற்குத் துன்பம் வந்து விட்டதோ…?" என்றாள் சிவதர்சினி. அதைக்கேட்ட மாதுமை கோபத்துடன் எழுந்து சென்றாள்.

**3. முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்**
**அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்**
**தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்**
**பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்**
**புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ**
**எத்தோநின் அன்புடமை எல்லோம் அறியோமோ**
**சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை**
**இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.**

"முத்துப்போன்ற வெண்மையான பற்களைக் கொண்டவளே, ஊரே எழுமுன் எழுந்து வந்து எல்லோரையும் எழுப்புவாயே. நேரம் காலம் தெரியாது, எழுந்து வந்து எனது தந்தை, ஆனந்தன், அமிர்தசொரூபி என்று மகிழ்வுடன் சொல்லி மகிழ்ந்து இனிக்க இனிக்கச் சிவனின் பெருமைகளைப் பேசுவாய். அப்படியான நீ இன்று காரணமெதுவுமின்றி உறங்கிக் கொண்டிருக்கிறாய். எழுந்துவந்து உனது வீட்டுக் கதவைத்திற" என்று சிவதர்சினி கூற மாதுமை சொன்னாள்; "நீங்கள் சிவனது பக்தர்கள். சிவனது அடிமைகள். ஒழுக்கம் மிக்கவர்கள். நாங்கள் புதிதாக அடிமை பூண்டவர்கள். எங்களது குறைகளைப் பொருட்படுத்தாது எங்களையும் உங்களோடு சேர்த்துக் கொள்ளக்கூடாதோ. அதனால் ஏதாவது தீமை வருமோ….?

"சித்தத்தைச் சிவன்பால் வைத்து, உயிரைச் சிவனுக்குரியதாக்கி, தன்னையும் சிவனையும் புரிந்து கொண்டு சிவனைப் போற்றி வணங்கிக்கொண்டு இருந்தால் மனநிறைவும் மகிழ்வும் கிடைக்கும். சிவன் பெற்றோரைப் போன்றவன். ஒரு குழந்தை தாய் தந்தையர் தனக்கு எல்லா உதவிகளையும் செய்வர் என்று

முழுமனதுடன் நம்புகிறது. அதைப்போலச் சிவனைத் தந்தையென்றும் தாயென்றும் நினைப்பவர்கள் ஒருபோதும் துன்பப்படமாட்டார்கள். எந்தப் பிள்ளையும் துன்பப்படுவதைப் பெற்றோர் விரும்பமாட்டார்கள். பிள்ளைகள் குறைபாடுடையவர்களாக இருந்தாலும் பெற்றோர் ஒதுக்கிவைக்க மாட்டார்கள். அதனால் உன்னிடம் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் சிவனிடம் முறையிடு. அவர் நீக்கி வைப்பார். அதை விடுத்து நாம் பக்தி நிறைந்தவர்கள். சிவனின் அடிமைகள் என்று கூறாதே. பக்தி என்பது மனதைப் பொறுத்தது. எந்தவிதமான பற்றுக்களுமின்றி ஓரிரு கணங்கள் சிவனைச் சிந்தித்தால் மனதில் பக்திவந்து புகுந்து மனதை நிரப்பிவிடும். அதைவிட்டு விட்டு ஒரு சிறிய பற்றுடன் அவனை நினைத்தாலும் அவனது நினைவு வராது. முதலில் மனதைச் சாந்தப்படுத்து அதன்பின் அவனை நினை. அவனை நினைக்கும்போது வேறு எதையும் நினைக்காதே. எதையும் நினைக்காத மனம் சிவனுடன் ஐக்கியப்படும்" என்றாள் சிவதர்சினி. "சிவதர்சினியின் தோழியான சுவர்ணா சொன்னாள்; "உண்மைதான் என்னை ஒருவன் காதலிப்பதாகக் கூறி எந்நேரமும் என்பின்னால் அலைகிறான். ஏதேதோ கதைக்கிறான். ஆரம்பத்தில் அவனை வெறுத்தாலும் இப்போ மனம் நாடுவதால் என்னால் எந்தச் செயலையும் செய்ய முடியவில்லை. மனம் தடுமாறுகிறது" என்றாள்.

"பற்றென்பது பற்றிப் பிடித்தால் பேயைப் போலவிடாது. அதனால் சிவனிடம் மனதை ஒப்படைத்து விட்டுச் செயலாற்று. பிழையும் சரிப்பட்டுவரும் எழுந்துவா" என்றாள் சிவதர்சினி.

**4. ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ**
**வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ**
**எண்ணிக்கொண்டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்**
**கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே**
**விண்ணுக் கொருமருந்தை வேத விருப்பொருளைக்**
**கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்**
**உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து**
**எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.**

அர்ச்சகா சொன்னாள்; "ஒளியை வீசுகின்ற முத்தைப் போன்ற பற்களை உடையவளே, உனக்கு இன்னும் விடியவில்லையோ...? ஏன் எழும்பாது

இருக்கிறாய்; சிவ நினைவு மனதில் இருந்தால் உரிய நேரத்திற்கு அது எழுப்பிவிடும். உரியநேரம் கழிந்தும் நீ எழும்பாதிருப்பதற்கும் காரணம் சிவ நினைவு துளியளவுகூட உனது மனதில் இல்லாமையேயாகும். சிவனின் நினைவை வேறு எதுவோ கைப்பற்றிவிட்டதா…?”

மாதுமை சொன்னாள்; “அழகிய கிளியைப் போன்ற இனிமையான மொழியைப் பேசுகின்றவளே, வரவேண்டியவர்கள் எல்லோரும் வந்து விட்டார்களா…?”

“உனக்கு எதற்கு அது. எண்ணிப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். அதற்கிடையில் நீ கண் உறங்கிக் காலத்தை வீணாக்காதே. விண்ணுலகத்தவர்-களுக்கு அமிர்தமாக இருப்பவனை, வேதங்கள் போற்றுகின்ற மேலான ஒப்பற்ற பொருளை, ஞானக்கண்ணுக்கு விருந்தாக இருப்பவனை, போற்றிப்பாடி மனமகிழ்ந்து நெகிழ்ந்து உருகிப் பாடுவதை விடுத்து யார் யார் வந்திருக்கிறார்கள், எல்லோரும் வந்து விட்டர்ர்களா என்ற கேள்வியை ஏன் கேட்கிறாய்…? அது ஆத்ம விடுதலைக்குத் தேவையில்லாத ஒன்று. ஒவ்வொருவரும் தான் தான் உழைத்துத் தமது குடும்பத்தை உயர்த்துவதுபோல ஒவ்வொருவரும் சிவனை அடையத் தனித்தனியே முயல வேண்டும். நாம் எல்லோரும் சேர்ந்து ஒப்பாரும் மிக்காரும் இல்லாத சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடியபடி செல்லலாமே தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. ஒவ்வொருவரினதும் மனதுதான் சிவனைத் தீவிரமாக நினைத்துப் போற்றுதல் வேண்டும். உனக்காக நானோ அல்லது எனக்காக நீயோ உண்ண முடியாததுபோலச் சிவனையும் வணங்க முடியாது. அதனால் எழுந்து வா” என்றாள் சிவதர்சினி.

சிவதர்சினியின் பேச்சைச் செவிமடுக்காது மறுபடியும் உறக்கத்தில் ஆழ்ந்தாள் மாதுமை. அதைக் கவனித்த சிவதர்சினி சொன்னாள்; “நாங்கள் வந்திருப்பவர்களைக் கணக்கெடுத்துக் காலத்தை விரையம் செய்ய விரும்பவில்லை. எமக்கு அது தேவையில்லாதது. ஏனென்றால் நாம் சிவனின் அடிமைகள். அவனையன்றி எவனையும் நினைப்பதில்லை. அதனால் எமக்குக் கணக்குத் தேவையும் இல்லை. உனக்குத் தேவையானால் எழும்பிவந்து கணக்கை எடுத்துப் பார். கூடியிருப்பவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், நீ சென்று உறங்கு. பாவை போன்ற பாங்கியே அந்தந்த நேரம்

செய்து முடித்துவிடல் வேண்டும். கழிந்தகாலம் மீண்டும் வரமாட்டாது என்பதை நினைவில் கொள். ஒவ்வொருவரும் வாழும்போதும் இன்பமாக வாழவேண்டும். அப்படி வாழும்போது சிவனைப் போற்றிப் புகழ்ந்து வாழவேண்டும். அப்போது தான் மறுமை வாழ்வு சிறக்கும். ஒரு மனிதன் இம்மை வாழ்வு சிறக்கவேண்டும் என்பதற்காகப் பொருள் தேடுகிறான். மறுமை சிறக்க வேண்டும் என்பதற்காக அருளைத்தேட வேண்டும். அதற்காகத்தான் நாம் முயல்கிறோம். அதனால் தான் உன்னை உறக்கம் என்ற அரக்கனின் பிடியிலிருந்து விடுவிக்க விரும்புகிறோம். அதை நீ உணர்வதாக இல்லை” என்றாள் சிவதர்சினி.

“சுவர்ணா, மால் அயன்கூடப் பற்றுக் கொண்டமையால்தான் சிவனை அறிய முடியாது அல்லற்பட்டனர். வாழ்க்கை என்பது திருமணத்தால் நிறைவுபெறும். அதற்காகக் காதல்வலையில் சிக்கலாகாது. அவனை உனக்கு யாரென்று தெரியாது. கோவிலுக்கு வந்தவன் உனது அழகில் மயங்கி விட்டான். அதை நம்பாது எல்லாவற்றையும் சிவனிடம் ஒப்படை. அவன் யாவற்றையும் நல்லபடி முடிப்பான்” என்றாள் அர்ச்சகா.

**5. மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்**
**போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்**
**பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்**
**ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்**
**கோலமும் நம்மைஆட் கொண்டருளி கோதாட்டுஞ்**
**சீலமும் பாடிச் சிவனே சிவனேயென் (று)**
**ஓலம் இடினும் உணராய் உணராய்காண்**
**ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.**

“மாதுமை, சிவன் என்ற பெருமலையின் அடியையும், முடியையும் மால், அயன் போன்ற தேவர்களாலேயே அறிந்து கொள்ள முடியவில்லை. அப்படியிருக்க மானிடராகிய எம்மால் எவ்வாறு அறிய முடியும் என்றால் அப்பேச்சுப் பொய்ப்பேச்சாகும் என்று நினைத்தாயா…? பால் போலவும், தேன் போலவும் இன்சொல்லைப் பேசுவாய். சிவனைப் போற்றுவாய். ஆனால் விடியற்காலையில் எழுந்து எம் இறைவனான சிவனை வாழ்த்தி வணங்க விரும்புகிறாய் இல்லை. அப்போ நீ முன்பு பேசியதெல்லாம் வீண்பேச்சா…?

இனியும் தாமதிக்காது உனது வீட்டின் கதவைத்திற, மண்ணுலகில் உள்ளோரும், விண்ணுலகில் உள்ளோரும், மற்றும் உலகங்களில் இருப்போரும் சிவனை முழுமையாக அறிந்து கொள்ள மாட்டார்கள். அத்தகைய அரிய அழகிய பெரிய பொருளின் பெருமைகளை எமது அறிவுக்கு எட்டியபடி பாடிப்பணிவோம். நம்மை அவன் எப்படி ஆட்கொண்டிருக்கிறான் என்பதையும், நம்மை எப்படித் திருத்தியமைத்துச் சீர்படுத்தி நல்லொழுக்கம் உள்ளவர்களாக மாற்றுவான் என்பதையும் அறிந்து போற்றி வணங்குவோம். தலைமயிருக்கு வாசனை சாத்து பூசிக்கொண்டும், அலங்கரித்துக்கொண்டும் அயர்ந்து தூங்குபவளே, நாம் சிவனைப் பற்றி உரக்கக் கத்தியபோதும் நீ எழுத்திருக்காதிருக்கிறாய். பாவை போன்ற அழகிய பெண்ணே, சிவனின் பெருமைகள் எவ்வளவு உயர்ந்தன, பெருமைமிக்கன என்பதை உணரா உறங்குவதால் இப்போது அது இன்பமளிக்கலாம். ஆனால் துன்பம் வரும்போது அதைப்பற்றி நினைப்பாய்" என்றாள் சிவதர்சினி.

"எமது தோழி என்பதாலும், நீ எப்போதும் சிவனைப்பற்றித் தேனைப்போல இனிமையாகப் பேசுவதாலும், நாம் உன்னைத்தேடி உனது வீட்டுக்கு வந்திருக்கிறோம். அதை உணராது நீ உறங்கிக் கொண்டிருக்கிறாய். பகலில் சிவனுக்கு ஒப்பான ஒரு தெய்வத்தைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாது. அவனுடன் ஒப்பாரை காணவும் முடியாது. அதனால் எப்போதும் யாவரும் சிவனுக்குத் தாழ்ந்தவர்களேயாவர். அவன் அனைத்துலகங்களுக்கும் அப்பாற்பட்டவன். பொன்போலப் பளபளக்கும் தீயின் வண்ணத்தை உடையவன். மெய்யன்பர்களின் நெஞ்சத்தாமரையை இருப்பிடமாகக் கொண்டவன். அவனது அருள் இல்லாவிட்டால் அமரர்க்கும் வாழ்வில்லை. அவனது அருளில்லாவிட்டால் தவம் செய்தும் பயனில்லை. அயன், அரி, அரனாலும் அவனது அருளில்லாமல் செயற்பட முடியாதென்பாய்" அவையெல்லாம் வீண்பேச்சா…? எழும்பு, சிவனைப் போற்றுவோம்" என்றாள் அர்ச்சகா.

"மாதுமை, வீட்டில் வளர்க்கும் வெள்ளை நிறமான கம்பீரமான எருதைச் சிவனின் வாகனம் என்று கூறித் தினமும் தூபதீபம் காட்டி அதை வணங்குவாய். சிவன் என்னை ஆட்கொள்ளவும், தன்னை வெளிப்படுத்தவும் எனது வீட்டுக்கு வந்திருக்கிறார் என்று கூறி அதற்கு மாலை அணிந்து நீறும் சந்தணமும் குங்குமமுமிடுவாயே. பகலெல்லாம் சிவனின் பேச்சும், அந்தக் காளையின் பேச்சும் பேசுவாய். இரவானதும் எல்லாவற்றையும் மறந்து விடுவாய். இது தானா உனது சிவபக்தி. யோசித்துப்பார்" என்றாள் சிவதர்சினி.

**6. மானே நீ நென்னலை நாளை வந்துங்களை**

**நானே எழுப்புவன் என்றலும் நாணாமே**

**போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ**

**வானே நிலனே பிறவே அறிவரியான்**

**தானேவந் தெம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்**

**வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்**

**ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்**

**ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.**

“மான்போன்ற சாயலை உடைய மாதுமையே, நாளைக்கு விடியுமுன் நானே வந்து உங்களை அழைத்துச் செல்வேன்” என்று சொன்ன சொல்லை எப்படி மறந்தாய்…? கணத்திற்குக் கணம் மாறுதல் அடைகிறாயே. உனக்கு வெட்கம் இல்லையா…? நேற்றுச் சொன்ன சொல்லை வெட்கமின்றி எத்திக்கில் போகவிட்டாய். இன்னமும் விடியவில்லை என்று எண்ணுகிறாயா…? விண்ணுலகத்தவர்களும், மண்ணுலகத்தவர்களும், ஏனைய உலகத்தவர்களும் அறிந்து கொள்ள முடியாத மகாதேவன் வலிய வந்து எம்மைக் காப்பாற்றி அடிமையாக்கினான். சிவன் மண்ணுலகைக் கடந்து நிற்கின்ற ஆதியையும் கடந்து நிற்பவன். அது போலக் கடல் வண்ணாகிய மாயனையும் கடந்து நிற்பவன். அத்துடன் ஈசனான அரனையும் கடந்து நிற்பவன். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் சிவன் எம்மீது கொண்ட அன்பின் காரணமாகவே எம்மைத் தனது அடிமைகளாக ஏற்றுக் கொண்டான். அத்தகைய பெருந்தன்மையுடைய சிவனின் மேன்மையான திருவடியைப் புகழ்ந்து நாம் பாடிக்கொண்டு வருகிறோம். நீ எம்மை வரவேற்கக் கதவைத் திறக்கிறாயில்லை. உனது வாயைத் திறந்து சிவனைப் போற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாது உறங்கிக் கொண்டிருக்கிறாய். உனது மனம் சிவன் மீது கொண்ட அன்பால் உருகாதோ…? இவ்வளவு கேவலமானவளா நீ. எமக்காகவாவது சிவனைப் போற்றிப்பாடு. அழகிய பாவையை ஒத்த பாங்கியே ஒரு பெண் இப்படி நடந்து கொள்ளக் கூடாது. எனது இக் கோரிக்கையை ஏற்றுக்கொள்” என்றாள் சிவதர்சினி.

“வழமையாக ஒழுங்குடன் செயற்பட்டுவந்த இவள் இப்போது ஏன் மாறுபாடாக நடந்து கொள்கிறாள். இவளுக்கு ஏதோ நடந்துவிட்டது. நாளைக்கு நானே வந்து உங்களை எழுப்புவன் என்றவள், உலகை மறந்து அயர்ந்து

தூங்குகிறாளென்றால் நேற்றுச் சொன்னதை முற்றாக மறந்து விட்டாள் என்றுதானே அர்த்தம். பகலில் அவளின் நடத்தையில் மாறுபாடு தெரிகிறது. அதனால்தான் பகலில் சொன்னதை இரவில் மறந்து விடுகிறாள். நேற்று கண்கள் எரிகின்றன சோம்பலாக இருக்கிறது என்றவள் இந்தக் குளிர்மையான மார்கழி மாதத்தில் ஏன் கண்கள் எரிய வேண்டும். உடம்பு அசதியாக இருத்தல் வேண்டும். இதற்கு அர்த்தம் என்னவென்றால் இரவில் நித்திரை கொள்ள வேண்டிய நேரத்தில் விழித்திருந்து கனவு காண்கிறாள். நேரம் தப்பிப் படுப்பதால் உரிய நேரத்தில் துயிலெழமுடியவில்லை. இதற்குக் காரணம் அவளது மனதில் இருந்த சிவன் மறைந்துவிட்டார் போலும். சிவ நினைவாகவே நான் படுக்கைக்குச் செல்வதால் உரிய நேரம் வந்ததும் மனதுக்குள் ஒரு குரல் ஒலிக்கிறது. நேரமாகிவிட்டது எழுந்து சிவனைப் போற்றிப்பாடு என்று ஒலிக்கிறது. சிவநினைவுடன் படுப்பவர்கள் எல்லோரையும் மனதில் உள்ள குரல் எழுப்பும்போது இவளை ஏன் அக்குரல் எழுப்பவில்லை….? எனக்குச் சந்தேகமாக இருக்கு அதனால் உனது பெற்றோருக்குச் சொல்லு முன் எழும்பு" என்றாள் அர்ச்சகா.

"மாதுமை, பகலெல்லாம் சிவனைப்பற்றி வாயோயாது பேசும் நீ இரவில் வாய்திறவாதிருப்பதேன்…? சிவன் சிவன் என்று எம்மை ஏமாற்றுகிறாயா…? சுவர்ணா உனது நெருங்கிய தோழி. அவளின் பின்னால் திரிபவனை நாம் கண்டமையால் உண்மையைச் சொன்னாள். அவனோடு அதிக நேரத்தைச் செலவழிக்கிறாள். எம்முடன் இப்போது பேசுவது குறைவு. அதனால் நாம் சந்தேகப்படுகிறோம். உனது மனதையும் யாரோ கொள்ளை கொண்டு விட்டானோ..? உனது உள்ளம் கவர்ந்த அந்த மன்மதக் கள்வன் யார்…? அப்படி இல்லாவிட்டால் இப்படி அயர்ந்து தூங்கமாட்டாய்." என்றாள் சிவதர்சினி.

7. **அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்**
**உன்னற்கு அரியான் ஒருவன் இருஞ்சீரான்**
**சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்**
**தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்**
**என்னானை என்அரையின் இன்னமுது என்று எல்லாமும்**
**சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ**
**வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்**
**என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.**

“அன்பான அன்னையைப்போல எம்மில் அளவில்லாத அன்பைச் செலுத்துபவளே, நாம் தொண்டை நோவடையும்படி பலமாகச் சிவனைப் போற்றிப்பாடியும் உன்னால் எழும்பமுடியவில்லையே! இப்படியான இயல்பு உனக்கு எப்படி வந்தது…? இதுநாள் வரை இப்படியான இயல்பை நாம் உன்னிடத்தில் காணவில்லை. திடீரென்று இத்தீய இயல்பு எப்படி உன்னை ஆட்கொண்டது. தேவர்களாலும் நினைத்தற்கரியவனும், ஒப்பு உயர்வு அற்றவனும், பெரும் சிறப்புக்கள் பலவும் கொண்டவனும், அழகிய கொன்றை மாலைகளால் கட்டப்பட்ட மாலையை அணிந்த குழற்சடையை உடைய சிவபெருமானின் வருகையை அறிவிக்கும் முகமாக கானம் ஊதும் ஒலி கேட்டவுடனேயே நாம் எல்லோரும் சிவ சிவ என்று வாய்திறந்து சொல்லிக்கொண்டு எழுந்து வருவோமே. அது உனக்கு நினைவில்லையா…? அக்கானம் ஒலித்தவுடன் சிவ என்றும் தென்னா என்றும் அவன் பெயரைச் சொல்லுமுன்பே தீயில் இட்ட மெழுகுபோல கரைவாயே. அதையும் இன்று மறந்தாயோ…? பெருமைகள் பலவும் உள்ள சிவனை நாம் உனக்கு முன்னிலையில் எமக்கு இனியவன் என்றும், எம் அரசன் என்றும், இனிய அமுதன் என்றும், நாம் தனித்தனியே சொல்லும்போது இன்புறும் நீ, இன்று நாம் அவற்றைச் சொன்னபோதும் அவற்றைக் கேளாது உறங்கிக் கொண்டிருக்கிறாய். கல்நெஞ்சத்தை உடைய அறிவிலிபோல நீ உணர்ச்சியற்றுக் கிடக்கிறாய். நித்திராதேவியின் தன்மை இத்தகைய கொடுமைமிக்க நோயா” என்றாள் சிவதர்சினி.

“சிவதர்சினி, நாம் கூட்டமாக நின்று சிவனைப் போற்றியும் பாடியும் மாதுமை உறக்கத்தில் இருந்து எழவில்லை. வழமையாக நாம் இங்கு வருமுன் உறக்கத்தில் இருந்து எழுந்து எம்மை வரவேற்று “இன்று ஏன் தாமதமாக வந்தீர்கள். என் இனியவன், என் அரசன், இனிய அமுதனைப் பாடிப்புகழும் நேரத்தைக் குறைத்துவிட்டீர்கள்” என்று எம்மீது கோபப்படும் மாதுமை, இன்று உரிய நேரத்திற்கு எழும்பவில்லை. அத்துடன் சிறுசத்தம் கேட்டாலும் துடித்துப் பதைத்து எழும்புபவள். இன்று நாம் பலமாகச் சிவனைப் போற்றிப் பாடியும், எழும்பவில்லையென்றால் அவளது உள்ளம் மாறுபாடு அடைந்துவிட்டது என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால் அவளுக்கு நல்ல புத்தியைக் கொடு என்று நாம் சிவனை வேண்ட வேண்டும். நேற்று மாலை மிகுந்த உற்சாகத்துடன் இருந்து சிவனைப் போற்றியவள் சிறிது நேரத்தில் மனம் மாறிவிட்டாள் என்றால் அவளுக்கு ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதோ…? அதனால் இன்னும் பலமாகச் சிவனின் புகழைப் பாடுவோம்” என்றாள் அர்ச்சகா.

“தேவர்களால் கூட நினைத்தற்கரியவனும், ஒப்புயர்வில்லாதவனும், பெருஞ் சிறப்புமுடையவனுமாகிய சிவனை நினைத்தால் மனம் தேனாக இனிக்கும் என்ற உனது மனதை வேறு யாரோ ஒருவன் இனிக்கப்பண்ணி விட்டானோ என எண்ணத் தோன்றுகிறது. கோவிலில் தொண்டு செய்யும் போது மிகுந்த அவதானமாகவும், சிவ சிந்தனையுடனும் செய்யும் நீ நேற்று விளக்கேற்றப் பலமுறை முயன்றதை நான் கண்டேன். மனம் தடுமாறினால்தான் செயல் தடுமாறும். நீ சொல்லாவிட்டாலும் உனது மனம் குழம்பியுள்ளது. காளையைச் சிவனின் மறு உரு எனப்போற்றும் உனது மனதை இன்னொரு காளை கவர்ந்துவிட்டதோ…? அது தவறு தோழி. சிவனை நம்பு. மிக மிகச் சிறந்த மணாளனை அவன் உனக்குத் தருவான்’’ என்றாள் சிவதர்சினி.

**8. கோழி சிலம்பச் சிலம்புங் குருகுஎங்கும்**

**ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்குஎங்கும்**

**கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை**

**கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ**

**வாழீஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்**

**ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ**

**ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை**

**ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.**

“அழகிய மாதுமையே, கோழிகள் கூவுகின்றன. பறவைகளின் ஒலி ஏழுஇசைநாதம் போல இனிக்கின்றது. வெண்சங்குகள் முழங்குகின்றன. உவமையில்லாத மேலான பொருளான சிவனைப் போற்றிப் பாடுகின்றோம். இவை எதுவும் உனக்குக் கேட்டகவில்லையா..? உன்னை வாழ்த்துகிறோம். இப்படி ஒரு மீளா உறக்கமா? அப்படியான உறக்கத்தைப்பற்றி எமக்கு எடுத்துச் சொல். கருணைக் கடலான சிவனின் மீது அன்பு இவ்வளவுதானா…? பிரளயத்தின்போது யாவும் ஒடுங்கும்போது எஞ்சியிருப்பவன் சிவன் ஒருவன்தான். அவன் உமாதேவியின் கணவன். அத்தகையவனது மகிமையைப் போற்றிப் புகழ்ந்து பாடுகின்றோம். தோழியே இதை நீ ஏற்றுக் கொண்டு உறக்கத்தை விட்டெழுந்து வா” என்றாள் சிவதர்சினி.

“தோழியே, அழகிய கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான், அழகு விளங்குகின்ற ஒளிரும் நெற்றியை உடைய உமையம்மையாரை ஒரு பாகத்தே வைத்திருப்பவன். அமரர்கள் தங்களுக்கு எது வேண்டுமானாலும்

சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பெற்றுக் கொள்வர். ஆனால் மானிடராகிய நாம் போற்றிப் புகழ்ந்து பாடினால் போதும். கேட்கத்தேவையில்லை. ஏனென்றால் சிவன்தான் எம்தாயும் தந்தையும். அதனால் எமக்கு எவை எவை எப்போது தேவையோ அவையெல்லாம் அவ்வப்போது வந்து சேரும் என்பாயே. அந்தச் சொல்லுக்கு அர்த்தம் என்ன என்பதையாவது சொல்லிவிட்டு உறங்கு. உனது மனதுள் பற்றொன்று நுழைந்துவிட்டது. அதனால் நீ விழுங்கப்பட்டு விட்டாய். பற்றால் விழுங்கப்பட்டவர்கள் சொன்னதை மறந்து விடுவார்கள். செய்வதையும் மறந்து விடுவார்கள். பேசுவது ஒன்று செய்வது ஒன்றாக இருக்கும் என்றும் சொல்வாய். இது உனது அனுபவமா…? ஏனென்றால் நானும் எனது தோழியரும் நேற்றுச் சொன்னபடி உரிய நேரத்திற்கு எழுந்து வந்துவிட்டோம். நீ தான் பற்றுக்குள்ளானதால் எல்லாவற்றையும் மறந்துவிட்டாய். மறதி என்பது பெரிய நோய் என்று ஞானிகள் கூறுவர். நீ எதை மறந்தாலும் எம்மைப் படைத்துக் காத்து அருள் செய்யும் சிவனை மறக்கலாமா..? உயிர்போனாலும் மறக்க முடியாதவன் அல்லவா சிவன். இன்று தோன்றி இன்றே உதிரும் அழகிய மலர்களைப் போன்ற பற்றை உள்ளத்துள்ப் புகவிடாதே. அது புகுந்தால் உன்னை நீ இழந்து விடுவாய். பின் அதன் சொற்படியே நடக்க ஆரம்பிப்பாய். அதனால் ஏதோ ஒரு பற்றால் உன்னை மறக்கப்பண்ணிய பற்றை விடுத்து எழுந்துவா. உனது நன்மைக்காகத்தான் சொல்கிறேன்" என்றாள் அர்ச்சகா.

"கோழி கூவமுன் எழுந்து சிவனையும் அம்மையையும் வணங்கினால் மன அமைதி கிடைக்கும். நிம்மதியும் உண்டாகும். அதனால் கேட்ட வரமும் கிடைக்கும். பிரளயத்தின்போது யாவும் சிவனிடம் ஒடுங்கும். அதனால் அப்படியான பிரளயம் இப்போது வந்தால் நாமெல்லோரும் இப்பவே சிவனிடம் ஒடுங்கலாம் என்பாய். இப்போ உனது மனதுக்குள்ப் பிரளயம் வந்துவிட்டதா? எனக்கு எல்லாம் சிவம்தான். அதனால் திருமணம் செய்யாது சிவனைப் போற்றப் போகிறேன். எமது தோழிகளில் ஒருத்தியான கல்பனா சிவனை எப்போதும் போற்றிப் புகழ்ந்து வணங்குபவள். அப்படியானவள் ஒருவனை விரும்பிப் பெற்றோருக்குத் தெரியாது அவனுடன் சென்றுவிட்டாள். சிவநினைவில்லாத அவன் இப்போது அவளைக் கொடுமைப்படுத்துகிறான். கல்பனா சிவபக்தை. அதனால் அவன் சிவனடியார் வேடம் பூண்டே அவளைக் காதலித்தான். இப்போது வேடத்தைக் கலைத்துவிட்டான். அதனால் எந்த ஆளையும் நம்பக்கூடாது. நாம் வணங்கும் சிவன் எமக்கு நல்வாழ்வளிப்பான்" என்பாய். அப்படியான நீ இன்று சிவநினைவின்றித் தூங்குவதன் மர்மம் என்ன?" என்று கேட்டாள் சிவதர்சினி.

**9. முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் போத்தும் அப் பெற்றியனே**
**உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எம்கணவர் ஆவர் அவர் உகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்தோம்**
**இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்**
**என்ன குறையும் இலோம்ஏலார் எம்பாவாய்.**

"மாதுமையே, பழையனவைகளில் எல்லாம் பழையவன் சிவபெருமான். பின் புதியவைகளிலெல்லாம் மறுபடியும் புதிய இயல்போடு இருப்பவனைத் தலைவனாகப் பெற்ற நாம் அவனது திருவடிக்கே உரியவர்களாவோம். அதனால் உனது அடியவர்களையும் வணங்குகிறோம். அதுபோல அவர்களை அனுசரித்து வாழ்கிறோம். அத்தகைய சிவனின் மீது பேரன்பு பூண்டவர்களையே எமக்குக் கணவன்மாராகச் சிவன் ஆக்கி வைப்பான். அவர்கள் உனது தொண்டர்களாக இருந்து உனக்குத் தொண்டு செய்வார்கள். அவர்களுடன் இணைந்து மகிழ்வுடன் நாமும் உனக்குத் தொண்டு செய்வோம். உன்னைப் போற்றிப் புகழ்வோம். சிவனே, பிறப்பில்லாதவனே, பின்னற் சடையை உடைய அளவிடப்பட முடியாத பேரறிவாளனே, என்றும் அழிவில்லாதவனே, யாவர்க்கும் குறைவில்லாத நிறைவான இன்பத்தை அருளி அவனைவிட்டு நீங்காது இருந்து அருள்பவனே, அத்தகைய உன்னைத் தொழும் எமக்கு கிருபை புரிந்தாயேயானால் எமக்கு எந்தக்குறையும் ஏற்பட மாட்டாது. இதைப் புரியாது உறக்கத்தில் இருக்கிறாய். தயவுசெய்து இதைப் புரிந்துகொள். புரியாது விட்டால் எண்ணிப்பார்" என்றாள் சிவதர்சினி.

"மாதுமை நீ சிவனைப்பற்றி அறியாதவளல்ல. முற்றும் அறிந்தவள். அதனால் உனக்குப் புதிதாக எதையும் சொல்லத் தேவையில்லை. சிவனைப் போற்றி வணங்கும் ஒருவனே உனக்குக் கணவனாக அமைதல் வேண்டும். சிவனைப் போற்றாதவர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், துன்பத்தையே அடைவர். அவர்கள் இன்பம் என்று சொல்வதெல்லாம் துன்பத்தில்தான் முடியும். நீயாக ஒருவனை விரும்பி அவனை உனக்குக் கணவனாகத் தா என்று ஒருபோதும் சிவனை வேண்டுதல் செய்யாதே. உனக்குப்

பொருத்தமான சிவனடியானை உனக்குக் கணவனாகச் சிவன் அனுப்பி வைப்பார். அப்படி அனுப்பி வைப்பவன் சிவனின்மீது பேரன்பு கொண்டவனாக இருப்பான். அதனால் இருவரும் இணைந்து தொண்டுகள் செய்யலாம். போற்றிப் புகழ்ந்து பாடலாம். இருவரது நிலையும் ஒன்றாக இல்லாமையால்தான் இன்று பல குடும்பங்கள் துன்பப்படுகின்றன. சிவனது நினைவோடு வாழும் சிவக் குடும்பங்களை நினைத்துப்பார். அக் குடும்பங்கள் எவ்வளவு மகிழ்வுடன் வாழ்கின்றன என்று எண்ணிப்பார். சிவநினைவு இல்லாத குடும்பங்கள் மகிழ்வுடன் தாம் வாழ்வதாக நடிக்கின்றனர். அதற்கு உதாரணமாக உனது மாமனாரின் குடும்பத்தையே சொல்லலாம். உனது மாமன் சிவநினைவில்லாதவர். அவர் தொழிலில் எப்போதும் நட்டமடைகிறார். உனது தந்தையோ இன்றி எனது தந்தையோ அல்லது எம் கூட்டத்தைச் சேர்ந்த எந்தப் பெண்களின் தந்தையோ துன்பப்படவில்லை. துன்பமென்று வந்தால் எல்லோரும் சிவனைச் சரணடைகின்றனர். அப்போது சிவன் யாரையோ அனுப்பி அத்துன்பத்தை நீக்கிவிடுவான். இது உனது குடும்பத்தில் நிகழ்வது. அதனால் பற்றுக்களைத் தானாக அழைத்துத் துன்பப்படாது உறக்கத்தில் இருந்து எழுந்துவா உனது வாழ்வு சிறக்கும்" என்றாள் அர்ச்சகா.

"மாதுமை, கல்பனாவின் கணவன் தற்போது வேறு சமயத்திற்குப் பொருளுக்காக மாறிவிட்டான். பெரும்பான்மையானவர்கள் பொருளுக்காகவே தீயசெயல்களைச் செய்கின்றனர். அதனால் கல்பனா கணவனைப் பிரிந்து மிகவும் துன்பப்படுகிறாள். அவளுக்கு ஒரு பிள்ளையும் இருக்கிறது. எம்மைக் காணும்போது, "அவர் சிவனுக்கு என்னுடன் சேர்ந்து தொண்டு செய்வார் என்று நினைத்தேன். அவர் என்னை மணப்பதற்காகப் பொய்ச்சத்தியம் செய்தவர். இப்போ சிவனின் அருளால் பெற்றோருடன் சேர்ந்து வாழ்கிறேன். எனக்காக நான் வாழவில்லை. எனது பிள்ளைக்காக வாழ்கிறேன். நான் வணங்கும் சிவனை நம்பாததால்தான் இந்தக் கொடுமை நிகழ்ந்தது. இனி நான் ஒருபோதும் சிவனை மறக்கமாட்டேன்" என்றவள. இது யாவும் உனக்குத் தெரியும். காதல் என்ற மாயவலை இனிமையானது. ஆனால் அதில் விழுந்தால் நரகம்தான். இதைப் புரிந்து எழுந்துவா" என்றாள் சிவதர்சினி.

**10. பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்**

**போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே**

**பேதை ஒருபால் திருமேனி ஒன்று அல்லன்**

**வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்**

**ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்**

**கோதில் குலத்தான் றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்**

**ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆரயலார்**

**ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.**

“அன்பான என் தோழியே, சொற்களால் விளக்கிச் சொல்ல முடியாத பெருமைகள் மிக்க சிவனது திருவடிகள் பாதாளத்தையும் தாண்டி அப்பாற் சென்றுள்ளன. அவற்றைத் தேவர்களால்கூடக் கண்டு கொள்ள முடியாது. ஏழு உலகங்களும் வியக்கும்படியும், அவை ஒன்றாகப் பொருந்துமாறும் சோதிப்பிழம்பாக நின்றருளியவன் எமது சிவபெருமான். அவன் இயல்பாகவே உலகமே உருவாக நிற்பவன். சிறப்பித்துக் கூறப்படும் ஏழு உலகத்திலும் பொருந்தி நிற்கும் திருநீலகண்டத்தை உடையவனும் சிவனே. அச் சிவபெருமானின் திருவடி மீது கொண்ட காதலால்தான் நானும் எனது தோழிகளும் அவனைப் போற்றிப் புகழ்ந்து பாடுகிறோம். அதில் நீயும் கலந்துகொள். அத்துடன் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட திருமுடியானது எல்லாப் பொருள்களுக்கும் முடிவானதாக உள்ளது. உமாதேவியாருடன் கூடி இருப்பதும் அவனது மேனி அல்ல. அவனது மேனியழகை முற்றாக விளக்க வேதங்களாலும், தேவர்களாலும், மக்களாலும் முடியாது. சொற்களுக்கும் அடக்கமுடியாத பெருமைகளை உடையவன் அவன். அனைவர்க்கும் உயிர்த்தோழனாக அமைந்த அவன் அடியார்களின் உள்ளத்தில் தெட்டத் தெளிவாக அமர்ந்திருக்கிறான். குற்றங்களில்லாத பெருமைகளையுடைய மேலான தெய்வம் அவன். அவனது ஆலயத்திற்கு வரும் அழகான பெண்களே, அவனுக்கு ஊர் இல்லை, அவனுக்கு வேறுபட்டவர்கள் இல்லை. அவனை முழுமையாக யாரும் போற்றிப் புகழமுடியாது. அதனால் அழகான மாதுமையே அவனது மகிமைகளை ஏற்று அவனைப் போற்றி வணங்க வந்துவிடு” என்றாள் சிவதர்சினி.

“மாதுமையே, சிவபெருமான் உயிர்ப்பொருள், உயிரற்ற பொருள் எல்லாவற்றுடனும் இயற்கை உண்மைப் பிணைப்பால் வேறற நிறைந்து நிற்பவன்.

இந்நிலையைச் சுத்தாத்துவிதம் என்பர். அத்துடன் இதை ஆலிங்கனம் என்றும் கூறுவர். இவ்வாறு தோன்றும் சிவன் இயற்கைப் பேரறிவுப் பேரொளிப் பெரும்பொருள். அவன் ஆருயிர்கள் தனது திருவடியை அடையும் பொருட்டுச் செந்நெறியாகிய மெய்ந்நெறியை அமைத்தருளியுள்ளான். அந் நன்னெறியினைத் திருவருளின் துணையோடு கண்டு தழுவுவோர் உயர்ந்தவராவர். அவர்கள் சிவனது திருவடியை அடையும் பாக்கியம் பெற்றவர்களாவர். நீ பகலில் எதைஎதையோ கற்பனை செய்து மகிழ்ந்தாய் போலத் தெரிகிறது. அந்த வீணான கற்பனைகள் இரவில் கனவாக வந்து உனது மனதை அல்லற்படுத்துகின்றன போலும். அதனால்தான் உண்மையை உணராது கனவுலகில் வாழ்கிறாய். அதைக் கலைத்துவிட்டு எழுந்து வா. பல்லூழிக்காலம் சிவபெருமானை நல்லறிவுடன் வழிபட்ட மெய்யன்புடைய ஒருவனுக்குப் படைக்கும் தொழிலை மேற்கொள்ள அருளோனான சிவன் வரங்கொடுத்தான். தன்னை மெய்யன்போடு வழிபடும் அடியவர்க்குச் சிவன் அவர்கள் விரும்பியவை யாவற்றையும் அன்புடன் கொடுப்பான். இது உனக்குத் தெரியாதா…? தெரிந்தும் ஏன் புரிந்து கொள்கிறாயில்லை. யோசித்துப்பார்” என்றாள் அர்ச்சகா.

“மாதுமையே, சிவனுக்கு ஊர் இல்லை, பேர் இல்லை, உறவினர் இல்லை, வேற்றுமைகள் இல்லை. அவனை முழுமையாக விளங்கிக் கொண்டவர்களும் இல்லை. அவன் இருந்த இடத்தில் இருந்து கொண்டே எங்கும் நடப்பதை அறிந்து கொள்வான். கல்பனாவின் தாய் மாமன் கல்பனாவின் குடும்பத்தோடு பிரச்சினைப்பட்டுப் பலகாலமாகப் பிரிந்திருந்தவர். அவர் கல்பனாவின் காதலனைப்பற்றி அறிந்தவர். பகையாக இருந்தாலும் தனது சகோதரியின் மகள் துன்பப்படக்கூடாது என்பதற்காக அவர் கோவிலில் கல்பனாவைச் சந்தித்து அவனைப் பற்றிக் கூறியவர். அதைக் கல்பனா நம்பவில்லை. தமது குடும்பத்தைக் கெடுக்கவே அப்படிச் சொல்கிறார் என நினைத்து அவருடன் சண்டையிட்டவள். பின்புதான் அதை உணர்ந்து சிவன்தான் மாமாவின் உருவில் வந்து உண்மையானவற்றைச் சொன்னவர். அதை நாம் நம்பவில்லை. அவர் சொல்வதை சிவனிடம் ஒப்படைத்திருந்தால் நான் தப்பியிருப்பேன். எல்லாம் விதியல்ல. எமது அறியாமை ஆணவம்” என்று சொல்லி அழுதவள் அது உனக்குத் தெரியும். தெரிந்துமா உறங்குகிறாய். சற்று யோசித்துப்பார்” என்றாள் சிவதர்சினி.

**11. மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்**

**கையாற் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி**

**ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண்ஆர் அழல்போற்**

**செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்**

**மையார் தடங்கண் மடந்தை மணவாளா**

**ஐயாநீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்**

**உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந் தோம்**

**எய்யாமைக் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.**

"தோழியே, அகன்றதும், நீர் நிறைந்ததுமான தடாகத்தில் நாம் இறங்கி, முகேர் என்ற ஒலியை உண்டாக்கி மூழ்கி மூழ்கி நீராடிவிட்டு, உனது திருவடியைப் போற்றிப் புகழ்ந்து பாடுகிறோம். அப்பனே பரம்பரை பரம்பரையாக உன் அன்பர்களாகிய நாங்கள் உனது அருளை நம்பியே வாழ்ந்து வருகிறோம். சுடர்விட்டு எரிகின்ற தீயைப்போன்ற செம்மேனியனே, வெண்ணீறு பூசியவனே, பெருமைகள் அனைத்தினதும் உறைவிடமானவனே, ஒடுங்கிய இடையும், மைபூசிய அகன்ற கண்களும் உடைய உமாதேவியின் தலைவா, அழகனே, உயிர்களை ஆட்கொள்ளுதல் உனது மகிழ்வான விளையாட்டாகும். அதனால்தான் நாம் எல்லோரும் உறுதியுடன் இன்பமாக வாழ்கிறோம். உன்னை நாம் எப்போதும் விருப்புடன் வழிபட வேண்டும். அவ் வழிபாட்டில் தளர்வு ஏற்படாமல் எம்மைக் காத்துக் கொள். இவ்வளவையும் நன்கறிந்த எனது தோழியான மாதுமை உன்னை மறந்துவிட்டாள் போலும். இல்லாவிட்டால் நாளைக்கு நானே வந்து உங்களை எழுப்புவேன் என்றவள் நாம் வந்து சில நிமிடங்களாகச் சிவனை வாழ்த்திப் பாடியும் நித்திரை விட்டெழாமல் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளாள். அவளைக் காப்பாற்று; எங்கும் நிறைந்து எவற்றிலும் பிரிப்பின்றித் திகழும் நீ, ஆருயிர்கள் மீது கொண்டுள்ள அளப்பரிய அன்பால் தூண்டுவாரும் வேண்டுவாரும் இன்றி அருளை மட்டும் துணையாகக் கொண்டு திருவுள்ளக் கருத்தாலே படைப்பு முதல் வீடு பேறு ஈறாகவுள்ள எல்லாச் செயல்களையும் புரிந்தருள்கின்றாய். அத்தகைய நீ ஐந்தொழில்களையும் செய்தருள்கிறாய்" என்று உனது பெருமைகளைக் கூறும் மாதுமை இன்று சொன்னவற்றை நினைக்காமல் அயர்ந்து தூங்குகின்றாள். இதற்குக் காரணம் என்னவென்று உனக்கும் அவளுக்கும் தான் தெரியும். ஏனென்றால் அவள் உனக்குச் சொல்லாமல் எதையும் செய்ததில்லை. அப்படியான அவளின்

மாற்றத்திற்கும் காரணனாக நீயே இருக்கின்றாய். அவளின் துயிலைக் கலை" என்றாள் சிவதர்சினி.

"அன்பான தோழியே, எமது தோழியான நாமகளின் அண்ணன் சிவபாலன் சிவநினைவே இல்லாத தீயவன். அவனோடு தீய நண்பர்கள் பலர் சேர்ந்திருப்பர். நீ ஒரு நாள் நாமகளின் வீட்டுக்குச் சென்றபோது அங்கு அவள் இருக்கவில்லை. அவர்கள் தோட்டத்திற்குச் சென்றிருந்தனர். அங்கு யாருமில்லாததை உணர்ந்த சிவபாலன் உன்னைத் தொந்தரவு செய்ய நீ சிவனே என்று பலத்துக் கூப்பிட அந்நேரம் ஒரு சிவனடியார் வந்து சிவபாலனைத் தான் கொண்டு வந்த கம்பால் அடித்துத் துரத்தியவர். அப்போது நீ என்ன சொன்னாய் நினைவிருக்கிறதா…? "நாம் வணங்கும் சிவன் மனிதர்களுக்கு மட்டுமல்ல. எந்த உயிருக்குத் துன்பம் வந்தாலும் ஓடோடி வந்து உதவுவார். அன்று நான் துன்பத்துடன் கூவியழைத்ததும் சிவனடியார் வேடந்தாங்கி என்னைக் காப்பாற்றியவர். அவரை நான் மறக்கமாட்டேன்'' என்றாயே. அதை மறந்து இன்று உறங்கிக் கொண்டிருக்கிறாய். உறக்கத்தைக் கலைத்துவிட்டுச் சொன்னவற்றை நினைத்துப்பார்'' என்றாள் அர்ச்சகா.

**12. ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்துஆடும்**
**தீர்த்தன் நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்**
**கூத்தன் இவ்வாறும் குவலயமும் எல்லாமும்**
**காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி**
**வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்**
**ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்**
**பூத்திகழும் பொய்கை குடைந்துஉடையான் பொற்பாதம்**
**ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்.**

"அன்பான தோழியே, அதைமட்டுமா சொன்னாய்? எம்முடைய பிறவித்துன்பத்தை நீக்குவதற்காக நாம் மகிழ்ந்து சிவனைப் போற்றிப் பாடுகிறோம். மகிழ்வுடன் ஆடுகிறோம். எமது ஆடலும் பாடலும் பரிசுத்தனாகிய தில்லைச்சிற்றம்பலத்தில் ஞானக்கனியெடுத்து ஆடுகின்ற கூத்தனை மகிழ்விப்பதற்கேயாகும். விண்ணுலகையும், மண்ணுலகையும், ஏனைய அண்டங்களையும் படைத்துக் காத்துப் பின் அழித்தலை அவன்

விளையாட்டாகவே செய்கிறான். அவனது பெருமைகளைப் பாட்டில் அமைத்துப் பாடும்போதும் எமது வளையல்களும் ஒட்டியாணமும் ஒலிக்கின்றன. அப்போது நாம் கூந்தலில் சூடிய மலர்களில் இருக்கும் தேனை உண்ண வந்த வண்டுகள் ரீங்காரமிடும். அதன்பின் மலர்கள் நிறைந்துள்ள பொய்கையில் நாம் நீராடிப் பின்பு சிவனின் பொன்னடிகளைத் துதித்துப் பெரிய சுனையின்கண் மூழ்குவோம்'' என்பாய். இவற்றையெல்லாம் மறந்து விட்டாயா? எழுந்து நினைத்துப்பார் யாவும் புரியும்'' என்றாள் சிவதர்சினி.

''அழகான மாதுமையே, சொல்வதை நீ இப்போது உடனுக்குடன் மறந்து விடுகிறாய். திருவருள் கைவரப் பெற்றவர்கள் ஆடுதல், பாடுதல், இன்பக் கண்ணீர் உகுத்தல், ஓலமிடுதல், இடத்திற்கு இடம் சென்று நற்பணி செய்தல் போன்றவற்றில் ஈடுபடுவர். அவன் என்றும் என்னுடன் கூடியிருந்து எனக்கு ஆபத்துக்கள் ஏற்படும் வேளையில் வந்து காப்பாற்றுபவன். இது எனது வாழ்வில் நடந்தது. திருவெம்பாவை பூசை தொடங்கிவிட்டது. தினமும் எவ்வேளையிலும் நான் சிவநினைவுடன் இருப்பதால் அன்று நடுச்சாமவேளையில் எழுந்து விட்டேன். முதல் நாள்க் கூறியபடி நான் சிவதர்சினியை எழுப்பலாமென்று அவளது வீட்டுக்குச் செல்லும் பாதையால் நடந்தேன். அன்று மழை பெய்து கொண்டிருந்தது. திடீரென்று எனக்குத் தெரியாத ஒருவர் என்முன் வந்துநின்று, "சிவன் மீது அதிக பற்றுக்கொண்ட அழகான பெண்ணே. நீ நேரம் தெரியாது நடுச்சாம வேளையில் எழுந்துவிட்டாய். திரும்பி வீட்டுக்குச் செல். அதிகாலை வேளை நான் சங்கு ஊதுகிறேன்" என்றவர். அதன்படி அன்றிலிருந்து இன்றுவரை அதிகாலை வேளையில் சங்கு ஊதப்படுகிறது. அதை அந்தப் பெரியவர்தான் ஊதுகிறார். ஆனால் அவரை இதுவரை யாரும் கண்டதில்லை என்றாய். அதிகாலையில் அப் பெரியவர் சங்கு ஊதிப் பலமணிநேரமாகி விட்டது. இன்னும் உனது உறக்கம் கலையவில்லை. உறக்கத்தைக் கலைத்துவிட்டு எழுந்து வந்து நீ சொன்னவற்றை எண்ணிப்பார்" என்றாள் அர்ச்சகா.

**13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்**

**அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்**

**தங்கள் மலங்கழுவு வார் வந்து சார்தலினால்**

**எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த**

**பொங்கும் மடுவில் புகைப்பாய்ந்து பாய்ந்துநம்**

**சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பப்**

**கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்**

**பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.**

“என் அருமைத் தோழியே, புதிய நீலோற்பலமும், புதிய செந்தாமரையும் குளத்தில் பூத்துக் குலுங்குகின்றன. அழகிய நீர்ப்பறவைகள் ஓலமிடுகின்றன. பாம்பு பின்னல் போடுகிறது. உடலில் உள்ள அழுக்கைப் போக்க விரும்புவோர் அங்கு வந்து கூடுகின்றனர். அதனால் சிவசக்தி சொரூபமாக அக்குளம் விளங்குகின்றது. அதில் நாம் குதித்துக் குதித்து நீராடுவோம். நாம் அணிந்துள்ள சங்குவளையல்களும், காற்சிலம்புகளும் சேர்ந்து ஒலிக்கட்டும். நமது நெஞ்சம் அதனால் பூரிப்பு அடையட்டும். நாம் எல்லோரும் ஒன்றாக மூழ்குவதால் நீர் பொங்கட்டும். இத்தகைய குளத்தில் நீராடுவது புண்ணியத்தைச் சேர்ப்பதாகும். இதை முதலில் ஏற்றுக்கொள். பின் அதைப்பற்றிச் சிந்தித்துப்பார்” என்றாள் சிவதர்சினி.

“மாதுமையே, குளத்தில் பூத்திருக்கும் கருங்குவளைப்பூ அம்பிகையின் உருவத்தை ஒத்தது. செந்தாமரை சிவனின் உருவத்தை ஒத்தது. அங்குவாழும் பாம்புகள் சிவனது கழுத்தில் ஆடும் நாகத்தை நினைவுபடுத்துகின்றன. இங்கு நீராட வருவோர் தமது அஞ்ஞான மலமென்ற அழுக்கைப் போக்குகிறார்கள் என்பாய். அத்துடன் குளக்கரையில் ஆடைகளை வைத்துவிட்டு நீ குளத்தில் இறங்கியபோது நீரில் ஓடி விளையாடிய பாம்பொன்று உனது காலைச் சுற்றிவிட்டது. முதலில் நீ யாரோ ஒரு தோழி விளையாட்டாக உனது காலைப் பிடிப்பதாக நினைத்தாய். பின்பு கையால் தடவியபோது அது பாம்பு எனத் தெரிந்தது. நீ பதட்டப்படவில்லை. குளத்தால் வெளியே வந்தாய். நாம் எல்லோரும் பயந்து விட்டோம். நீ பயப்படவில்லை. நாம் வணங்கும் சிவன் தனது கழுத்தில் மாலையாகப் பாம்பை அணிந்துள்ளான். அது என்னை விரும்பிவந்து காலணியாக மாறியுள்ளது. அது விரும்பும்போது விலகிச் செல்லட்டும். இக் குளத்தில் வாழும் பாம்புகள் யாரையும் கடித்ததில்லை என்றாய். சில நிமிடங்கள் சென்றபின் அது உனது காலை விட்டிறங்கிக் குளத்திற்குச் சென்றது. அப்போது சொன்னாய்; “திருவருளின் துணையால் சிவனின் திருவடியைத் தலையில் சூடுவேன். அதன்பின் அத்திருவடி உணர்வை நெஞ்சினுள் வைப்பேன். உயிருக்குயிரான சிவன் என்ற பெருந்தலைவனை

செந்தமிழால் பாடுவேன். நறுமணங்கள் நிறைந்த மலர்களை கைகளால் அள்ளித்தூவி வணங்குவேன். மகிழ்ச்சியால் ஆடுவேன், பாடுவேன். அப்படிச் செய்யும் என்னை நாகம் தீண்டுமா…? துன்பங்கள் வந்து சேருமா…? சொல்லடி அர்ச்சகா" என்றாய். இன்று அவற்றையெல்லாம் மறந்து தூங்குகின்றாயோ… உனது வாய்ச் சொற்கள் பொய்யாயிற்றே…. எழுந்து வந்து என்ன சொல்லப் போகிறாய்"? என்றாள் அர்ச்சகா.

**14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்**

**கோதை குழலாட வண்டின் குழாம் ஆடச்**

**சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி**

**வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிப்**

**சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி**

**ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்**

**பேதித்து நம்மை வளர்த்துஎடுத்த பெய்வளைதன்**

**பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.**

"தோழியே, காதில் அணிந்துள்ள தோடுகள் ஆடவும், பசும்பொன்னால் செய்யப்பட்ட ஆபரணங்கள் பலவும் அசையவும், பூமாலை சூடிய கூந்தல் அசைந்தாடவும், அப்பூமாலையில் இருக்கும் தேனைக்குடிக்க வந்து மொய்த்துள்ள வண்டின் கூட்டம் ஆடவும், நாம் குளிர்ந்த நீரில் மூழ்கி நீராடுவோம். நீராடியபின் சிற்றம்பலத்தானைப் போற்றிப் புகழ்ந்து பாடுவோம். வேதங்கள் அவனது புகழை விதந்து விளக்குகின்றன. எமது நோக்கம் அவனை அடைதலே. அவன் ஞானச்சோதிவடிவானவன். தனது சடையில் கொன்றை மலர்களால் கட்டப்பட்ட மாலையைச் சூடியிருக்கிறான். பிரபஞ்சத்திற்கு முன்பும், அதன் பின்பும் நிலைபெற்றிருப்பவனும் அவனே. நம்மைப் பிரபஞ்சத்தில் இருந்து வேறுபடுத்திக் காப்பாற்றியருள்கின்ற அன்னை பராசக்தியின் மகிமையை நாம் சேர்த்துப் பாடவும், ஆடவும் செய்வோம் எழுந்து வா" என்றாள் சிவதர்சினி.

"இவள் எழுந்து வர மறுப்பதன் காரணம் எதுவாக இருக்கும்"? அழகிய வளையல்களை அணிந்த பராசக்தி என்ற எமது அன்னை இன்ப ஊற்றான திருவினை உடையவள். அவளே துன்பங்களைத் தரும் வினைகளை அகற்றி அருள்பவள். ஞாயிற்றுக்கு ஒளி கொடுப்பவளும் அவளே. அவளே அடியார்களின்

வினைகளை அறுத்தெடுத்து அவர்களைத் திருவடியுணர்வில் வைத்திருப்பவள். அத்துடன் எல்லாப் புவனங்களுக்கும் தலைவியாக விளங்குகின்ற அருளம்மையையும் சிவனுடன் சேர்த்துப் போற்றுதல் வேண்டும். அவள் யமனையும் மனம்மாறச் செய்பவள். முடிவில்லாத ஆற்றலின் உறைவிடம் அவள். எம் இறைவனாகிய சிவபெருமான் உலகையும், உடல்களையும் படைத்தருள உறுதி செய்தபோது சிவனுக்கு உதவத் திருவுளங்கொண்டு சிவத்துடன் பொருந்தி முனைந்து நின்றவள். அவளையும் சேர்த்துத் துதித்தல் வேண்டும். அப்போதுதான் அவள் பிரபஞ்சத்தில் இருந்து எம்மை வேறுபடுத்திக் காப்பாற்றுவாள். ஒருமுறை நாம் பாடசாலையில் கற்கும்போது சுற்றுலாவுக்குச் சென்றோம். நடுக்காட்டு வழியாகப் பிரயாணம் செய்தோம். அப்பொழுது நம்மை ஏற்றிவந்த மோட்டார் வாகனம் பழுதாகிவிட்டது. ஆசிரியர்களும் நாமும் பயந்து போனோம். வாகனச் சாரதி சொன்னான். "இது பயங்கரமான காடு. வழிப்பறிக் கொள்ளையர்கள் பலர் இங்கிருக்கிறார்கள். அவர்கள் வாகனங்களைத் தாக்கிக் கொள்ளையடிப்பது வழக்கம். அதனால் நகைகளை அணிந்து வந்தவர்கள் கழற்றி மறைத்து வையுங்கள்." என்றபோது நாம் பயந்து விட்டோம். நாமும் தோழியரும் சிவனையும், அம்மையையும் பிரார்த்தித்தோம். அப்பொழுது எம்மை நோக்கி ஒரு வெளிச்சம் வந்தது. நாம் மிகுந்த பயத்துடன் கூக்குரலிட்டோம். வந்தது ஒரு பெண். "பயப்படாதீர்கள்; உங்களுக்கு உதவவே நான் வந்தேன். நான் இக்காட்டில் வசிக்கும் தில்லையம்பலம் என்ற வேடனின் மனைவி. என்னைக் கண்டால் காட்டில் உள்ள கொடிய மிருகங்களும் பயப்படும். அதனால் வாகனத்தைத் திருத்தும்வரை நான் உங்களுக்கு உதவியாக இருப்பேன்" என்றாள். சிறிது நேரத்தில் வாகனச்சாரதி வாகனத்தைத் திருத்திவிட்டான். அதன்பின் அப்பெண்ணிடம் விடைபெற்றுச் சென்றோம். எமக்கு உதவிய பெண் அம்மைதான் என்று உறுதியாக நான் சொல்வேன். அதனால் நாம் சிவனுடன் சேர்ந்து அம்மையையும் போற்றுதல் வேண்டும்" என்றாய். இப்போ அவற்றையெல்லாம் மறந்து தூங்குகிறாய்.. இது நியாயமா? யோசித்துச் சொல்" என்றாள் அர்ச்சகா.

**15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்**
**சீரொருகால் வாய் ஓவாள் சித்தம் களிகூர நீரொருகால் ஓவா**
**நெடுந்தாரை கண்பனிப்பப் பாரொருகால் வந்தனையாள்**
**விண்ணோரைத் தான் பணியாள் பேரரையற்கு இங்ஙனே**

**பித்துஒருவர் ஆமாறும் ஆர்ஒருவர் இவ்வண்ணம்**

**ஆட்கொள்ளும் வித்தகர் தாள் வாருருவப் பூண்முலையீர்**

**வாயார நாம்பாடி ஏருருவப் பூம்புனல் பாய்ந்து**

**ஆடேலோர் எம்பாவாய்.**

"மாதுமை என்ற அழகிய அணங்கே, எம்பெருமானையே எந்நேரமும் நினைத்து உருகுவாய். சிலநேரங்களில் எம்பெருமானது பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்வுடன் உரையாடுவாய். மனதில் மகிழ்ச்சி பெருகி வந்தால் ஆனந்தக் கண்ணீர் சொரிவாய். சில நேரங்களில் உணர்ச்சிகளற்று ஐந்தெழுத்தை ஓதியபடி நிலத்தில் வீழ்ந்து கிடப்பாய். எவ்வளவு பெரியவராக இருந்தாலும், சிவ நினைவுடன் நீ இருந்தால் அவரை மதிக்கமாட்டாய். பித்துப் பிடித்தவளைப் போலச் சிவனின் நாமத்தை உரத்து உரைத்துக் கொண்டிருப்பாய். உன்னைப்பற்றி அறியாதவர்கள் உனக்குப் பித்துப் பிடித்துவிட்டது என்று சொல்வர். சிறுவர்கள்கூட நின்று உனது செயல்களைச் சிரித்து இரசிப்பர். இதையெல்லாம் அறியாத நீ சிவ நினைவில் இருந்து பாடுவாய், ஆடுவாய், பரவசப்படுவாய். ஓர் உயிரை இவ்வாறு மாற்றும் தன்மை சிவனைத் தவிர வேறு எவருக்கும் இருக்க முடியாது. கச்சும் பூணும் அணிந்த பரத்தையரைப் போன்ற மார்பகங்களையுடைய பெண்ணே, எம் இறைவனை ஓயாது போற்றிப் புகழ்ந்த நீ அழகிய பூக்கள் நிறைந்த பொய்கையில் குதித்து நீராடுவோம். வா. இவற்றையெல்லாம் சொல்லியும் கேளாது தூங்குகிறாயே. இவற்றை எண்ணிப்பார்" என்றாள் சிவதர்சினி.

"மாதுமை, நீ எம்மிடம் எவ்வளவு கதைகளைச் சொல்லியிருப்பாய். அவற்றை நம்ப முடியாது என்று நாம் சொல்வதில்லை. அப்படிச் சொன்னால் உனது மனம் வாடிவிடும் என்று எமக்குத் தெரியும். அத்துடன் நீ சிவனில் கொண்டிருக்கும் தீவிரமான பற்றால் நீ சொன்னபடி அவர் நடந்திருக்கக்கூடும் என்றும் எண்ணுவோம். ஒரு நாள் அதிகாலையில் எழுந்து வந்து என்னை எழுப்பியபின் சொன்னாய், "அர்ச்சகா தினமும் சிவனின் கழுத்தில் நடனமாடும் நாகத்தைப் பார்த்துக் கேட்டேன்; "அன்பான எனது தெய்வத்தின் கழுத்தில் ஆடும் நாகமே, உன்னைத் தொட்டுப் பார்க்க விரும்புகிறேன். அத்துடன் எனக்கு முன் நீ படமெடுத்து ஆடவேண்டும்" என்று கேட்டேன். உடனே நாகம் "நீ என் இறைவனின் பக்தை. அவரை நினைத்தால் நீ பரவசமாகிவிடுவாய். அத்துடன் உன்னையும் உலகையும் மறந்து சிவசொரூபமாகிவிடுவாய். அதனால்

சிவனைப்போல உன்னையும் நான் நேசிக்கிறேன். அன்பு செலுத்துகிறேன். அதனால் கீழே இறங்கிவந்து ஆடுகிறேன். சிவனின் கழுத்தில் நான் ஆடும்போது நான் விரும்பிய இசை ஒலிக்கும். இசையில்லாமல் நான் ஆட மாட்டேன். அதனால் நீ மகுடி ஊது" என்றது. நான் மகுடியை எடுத்து ஊத நாகம் சிவனின் கழுத்தில் இருந்து கீழே இறங்கி வந்து ஆடியது. மிகவும் அழகாக ஆடியது. அது ஆடி முடிந்ததும் அதைத் தொட்டுப் பார்த்தேன். அது எனது உடலில் ஏறி எனது கழுத்தைச் சுற்றிக்கொண்டு நின்றது. நான் பரவசமானேன். பின் அதைக் காணவில்லை" என்றாய். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். பக்கத்தில் இருந்த கவிதா சிரிப்பை அடக்க முடியாது சிரித்து விட்டாள். அப்படிச் சிவனில் உருகிய நீ இன்று அவற்றைப் பற்றிச் சிந்திக்காது உறங்குவது நியாயமா?" என்று கேட்டாள் அர்ச்சகா.

**16. முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்**

**என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்**

**மின்னப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்**

**பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்**

**என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்**

**தன்னிற் பரிவிலா எங்கோமான் அன்பர்க்கு**

**முன்னி யவன்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே**

**என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.**

"மாதுமை நீ சொல்வாய்," மேகமே கடல் நீரைக் குடித்தமையால் நீ உமாதேவியாரின் கார்நிறத்தைப் பெற்றாய். நீ மின்னலாக மின்னியது உமாதேவியாரின் சிறிய இடையை ஒத்திருந்தது. நீ இடியாக இடித்தது அம்பிகையின் திருவடியை அலங்கரித்திருக்கும் பொற்சிலம்புகளின் ஓசைபோல இருந்தது. நீ வானவில்லாக வெளிப்பட்டு நின்றது அம்பிகையின் புருவத்தைப் போலிருந்தது. எம்மை ஆளும் தெய்வமான சிவனின் அன்பர்களுக்கு முதலில் அருளிவிட்டு பின்பு எமக்கு அருளை மழையாகப் பொழிவாயாக. அழகான பெண்ணே இவ்வாறெல்லாம் கூறிவிட்டு அவற்றை மறந்து விட்டாயோ...? அவற்றை எண்ணிப் பார்த்து அவற்றை ஏற்றுக்கொள்" என்றாள் சிவதர்சினி.

“இவ்வளவுமா சொன்னாய். நீ சொன்னவற்றை நாள் முழுவதும் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். அழகிய கொடி போன்ற இடையை உடைய அம்மை, சிவன் திருவுருக்கொண்டு விளங்குவதற்காக ஆற்றல்மிக்க பேரொழிப் பிழம்பாக நின்றவள். அவள் விண்ணில் தோன்றும் மின்னல் கொடியைப் போன்றவள். அதனால் உலகம் பொற்கொடி வண்ணமாய் இருக்கிறது.” என்றாய். பின், “கணையொத்த கண்களையும் கொம்பையும் ஒத்த இடையையும், அழகுகளையும் உடைய அம்மை, நறுமணம் கமழும் செம்பொன் திருமேனியுடன் சிவபெருமானை நோக்கி ஆருயிர்களுக்கு இன்பமொழியைத் தினந்தோறும் வழங்கி மகிழ்வதோடு, சிவபெருமானுடன் சேர்ந்து ஆருயிர்களுக்கு இன்பங்களை வாரி வழங்குகிறாள்” என்றும் சொன்னாய். அம்மையும் சிவனும் உனது கனவில் வந்து அடிக்கடி உலக விடயங்களைக் கூறுவதாகச் சொல்வாய். எமது தோழியான கவிதா ஒருவனைத் தீவிரமாகக் காதலித்தாள். அவள் தீவிரமான சிவபக்தை. சிவ விரதங்களையும், அம்மையின் விரதங்களையும் முறைப்படி அனுட்டிப்பவள். கவிதா வசதியான குடும்பத்தவள். அவளைக் காதலித்தவன் நடுத்தரக் குடும்பத்தினன். ஏழையென்றாலும் சிவபக்தனாக இருந்தால் அவனைத் திருமணம் செய்தால் சிவனும் அம்மையும் சேர்ந்து உதவுவர். ஆனால் அவன் மதுபான வகைகளைக் குடிப்பவன். உயிர் கொலை செய்பவன். அதனால் அம்பிகையும் சிவனும் உனது கனவில் வந்து கவிதாவைக் காப்பாற்றும்படி வேண்டினர். அவன் நன்றாகக் குடித்துவிட்டு நடுவீதியில் சுயநினைவில்லாமல் விழுந்து கிடந்ததைக் கவிதாவை அழைத்துச் சென்று காண்பித்தாய். அதனால் கவிதா உன்னைத் தான் வணங்கும் அம்மையாக எண்ணி வணங்கினவள். இவ்வளவு அருளும் பக்தியுமுள்ள நீ இன்று அதை நினைக்காதிருக்கிறாய். தயவு செய்து நினைத்துப்பார்” என்றாள் அர்ச்சகா.

**17. செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள் பால்**
**எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்**
**கொங்குஉண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி**
**இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்**
**செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேகனை**
**அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை**
**நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்**
**பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.**

“மாதுமை அழிவதும், அழியாததும், தோன்றியிருப்பதும், ஒடுங்கி இருப்பதும் ஆகிய நிலைகள் இப்புவிக்கு உண்டு. இப் புவியைத் தாங்கிக் கொண்டிருப்பவன் சிவன். சிவனை அறிந்து கொள்ளாத உயிர்கள் உலக இன்பங்களில் ஆசைப்படும். இயல்பாகவே நறுமணமுடைய கரிய கூந்தலையுடைய மாதுமையே, விட்டுணு பிரமா முதலிய தேவர்களிடத்து இல்லாத பேரின்பம் எமக்கு என்றும் சொந்தமானது. எமது குற்றங்கள் களையப்படும்போது அது அனுபூதியாகிறது. அதற்காகத்தான் எம் இறைவனான சிவன் வீடுகள் தோறும் எழுந்தருளியிருக்கிறான். செந்தாமரையை ஒத்ததனது பொற்பாதத்தை நமக்குக் கொடுத்தருளும் சேவகன் அவன். அருளைமிக்க கண்களையுடைய அரசன் அவன். அடியார்களாகிய எமக்கு அவன் நிறைவான அமிர்தம் போன்றவன். சிவஞானம் என்ற பேரின்பம் அவனிடமிருந்து எமக்குக் கிடைக்கிறது. நாம் தாமரைப் பூக்கள் நிறைந்திருக்கும் தடாகத்தில் நீராடிவிட்டு அவனது பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்து பாடுதல் வேண்டும் என்றாயே. அதை நினைத்துப் பார். அவனது புகழைப் பாடுவோம் எழுந்துவா” என்றாள் சிவதர்சினி.

“மாதுமை, உனது போக்கைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்கிறாய். வரதன் பறைமேளம் அடிக்கும் முதியவன். அவன் சிவன்கோவிலில் தினமும் பூசை வேளைகளில் பறை மேளம் அடிப்பான். அவனின் முன்னால் ஓர் உண்டியல் இருக்கும். கோவிலுக்கு வருவோர் சிவனைத் தரிசித்துவிட்டு அவனது உண்டியலில் பணத்தை இடுவர். அவன் யாரோடும் பேசுவதில்லை. பணம் உணவு கேட்பதில்லை. அடியார்கள் பணமிடும்போது “இது சிவச் சொத்து” என்பான். மாலையில் தனது உணவுக்குத் தேவையான பணத்தை எடுத்துவிட்டு மிகுதிப் பணத்தைக் கோவில் உண்டியலில் போட்டுவிடுவான். இது தினமும் நடைபெறும் ஒரு சாதாரண நிகழ்வு. மாதுமை கோவிலுக்கு வரும்போது வரதனுக்கு உணவு கொண்டுவந்து கொடுப்பாள். அதை அவன் மிக்க மகிழ்வோடு வாங்கி உண்டுவிட்டு, “உமையின் பெயரை வைத்த உனது பெற்றோர் பொருத்தமான பெயரைத்தான் வைத்துள்ளனர்” என்பான். அவன் எல்லோரிடமும் உணவை வாங்க மாட்டான், “மாதுமை அம்மா, சிவன் தனது பொற்பாதங்களை உனக்குக் கொடுத்தருளியுள்ளான். அருளை நிறைந்த கண்களை உடைய அவன் அடியவர்களுக்கு நிறைவான அமிர்தத்தைப் போன்றவன். சிவஞானம் என்ற

பேரின்பத்தை அவன் தனது முழுமையான அடியவர்களுக்குக் கொடுப்பவன். அதை உனக்குத் தந்துள்ளான். அதனால்தான் நீ சிவனடியார்களையும் போற்றுகின்றாய், வழிபடுகின்றாய். மெய்யடியார்களின் அகத் தாமரையில் அம்மையப்பர் வீற்றிருப்பர். அவர்களை முழுமையாக உணர்ந்தவள் நீ. பேரின்பமாகிய தேனைத் தருபவர்கள் அவர்கள் என உணர்ந்து அவர்களைப் போற்றுபவள் நீ. அதனால் தான் மக்களால் மதிக்கப்படுகிறாய். அம்மையே, உனது மனத்தைச் சிவனிடமிருந்து ஒருபோதும் அகற்றாதே" என்று வரதன் சொல்ல என் உயிருக்கு அழிவு இல்லை. அது சிவனைச் சேரும்வரை சிவநினைவாகவே பிறந்து இறந்து பின் பிறக்கும் எப்பிறவியிலும் நான் சிவனை மறக்கக்கூடாது என்றுதான் சிவனை வணங்குகிறேன்" என்றாய். இப்போ அதை மறந்து அயர்ந்து தூங்குகிறாய். இது தருமமா…? யோசித்துப் பார்" என்றாள் அர்ச்சகா.

**18. அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்**
**விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்**
**கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்**
**தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்**
**பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்**
**விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகித்**
**கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்**
**பெண்ணே இப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.**

"அழகான பெண்ணே, திருவண்ணாமலையில் கோவில் கொண்டிருக்கும் சிவபெருமானினது தாமரைத் திருவடிகளை வணங்கும் தேவர்களது திருமுடியில் பதிக்கப்பட்டிருக்கும் இரத்தினங்கள், பவளங்கள், முத்துக்கள் யாவும் தத்தமது ஒளியை இழந்துவிடும். உலகம் முழுவதையும் ஒளி வண்ணமாக்கும் சூரியனும், சிவனின் முன்னால் தனது பேரொளியை இழந்து விடுகிறான். அது போலக் குளிர்ந்த நட்சத்திரங்களும், இறைவன் முன் தமது ஒளியை இழந்து விடுகின்றன. அவர்கள் முன் எமது இறைவனான சிவன் பெண்ணாயும், ஆணாயும், அலியாயும், அனைத்துமாகியும், அவற்றிற்கு வேறாகவும் இருப்பான். ஒளியோடு கூடிய ஆகாயம், மண் மற்றும் ஐம்பூதங்களுமாகி அவைகளுக்கு வேறாகவும்

இருக்கிறான். அவன் அழிவில்லாத அரிய பொருள். அதனால் பெண்ணே, அவனது பெருமைகளைப் போற்றிப் புகழ்ந்து பாடியவாறு பூம்புலன் ஆடுவோம் எழுந்து வா. சிவனின் மகிமைகளையெல்லாம் ஏற்றுக்கொள். அதைப்பற்றி ஆலோசித்து முடிவை எடு" என்றாள் சிவதர்சினி.

"தோழியரே, ஆமையைப்போன்று மெய் முதலிய அறிவுக் கருவிகளைத் திருவருளின் துணையோடு தீயவழியில் செல்லவிடாது தடுத்து நல்வழிப்-படுத்துங்கள். அதுதான் புலனடக்கம். நான் சிவனுக்கு அடிமையென்று உறுதியாக எண்ணினால் தீய புலன்களால் கேடுவராது. சிவன் உள்ளொளியாக உள்ளத்தில் வந்து ஒளிர்வான். அப்போது திங்களைச் சூடிய சிவன்தோன்றி அறிவருள் நிலையைத் தருவான்" என்பாய். சில தினங்களுக்கு முன்பு நாம் சிவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிவிட்டு வெளியே வந்தபோது பறைமேளத்தைக் கோவிலில் பூசைநேரத்தில் தினமும் அடிக்கும் வரதன் எம்முன் வந்து உனக்குச் சொன்னான்; "தாயே சங்கரனைப்பற்றி உனக்குத்தெரியும்" என்றபோது நீ சொன்னாய், "சிவனின் அடியவரே, உலகே அறிந்த சங்கரனை எனக்குத் தெரியாதா என்ன?" என்றாய். அதற்கு வரதன் "அந்தச் சங்கரனைச் சொல்லவில்லை அம்மா, எமது பக்தன், சிவனடியான், சிவலிங்கத்தின் மகன் சங்கரனைச் சொன்னேன். அவன் தான் உனது தோழியான அம்பிகைக்குக் கணவனாக வரவேண்டியவன். நீ சிவலிங்கத்திற்குச் சொல்லி ஆவன செய்" என்றான். அதைக்கேட்ட கவிதாவுக்கு அளவில்லாத கோபம் வந்துவிட்டது." கோவிலில் பறை மேளமடித்துப் பிழைப்பு நடத்தும் நீ யார் எனது தோழிக்குத் திருமணம் பேச, அப்பாவுக்குச் சொன்னால் என்ன நடக்கும் தெரியுமா..?" என்றாள்.

வரதன் சிரித்துவிட்டுச் சொன்னான்; "எதுவும் நடக்காது. சிவலிங்கத்திற்கும் மனைவிக்கும் விருப்பம். அம்பிகை இருமனம் கொண்டுள்ளாள். அதை மாற்ற வேண்டும். மாறாவிட்டால் துன்பப்படுவாள்" என்று கூறிவிட்டு வரதன் சென்றுவிட்டான்.

"கவிதா, சிவன்முன் பெருமைகள் எதுவும் செயற்படாது. தேவர்களினது முடியில் உள்ள இரத்தினங்களும், சூரியனதும் நட்சத்திரங்களினதும் ஒளியும் சிவன்முன் தமது ஒளியை இழந்துவிடும் என்று உனக்குத் தெரியாதா…?

சிவனது சன்னிதியில் சகலமும் சமம். சிவனடியாரான வரதனை நீ அவமானப்படுத்திவிட்டாய். அப்பெரியவரிடம் மன்னிப்புக்கேள். சங்கரன் நல்வன், வசதியானவன். ஆனால் கறுப்பு நிறத்தை உடையவன். சிவனும் உமையும் கருமைநிறம் கொண்டவர்கள். அவர்களை நாம் போற்றித் துதிக்கவில்லையா..? மனம்தான் வாழ்வது. நிறமல்ல. நேற்றுச் சிவலிங்கம் மாமா என்னைச் சந்தித்து விபரமாகக் கூறினார். இதுபற்றி எப்படி வரதனுக்குத் தெரியும். யோசித்துப்பார். சிவன் தனது பக்தர்களுக்கு உதவி செய்வதற்காக வேறுபாடு காட்டாது கீழிறங்கி வருவார். அது தான் அவர் வரதனிடம் சொல்லியிருக்கிறார். வரதனின் வாய்ச்சொல்லைப் பலர் சிவனின் வாக்காகக் கொள்வது உனக்குத் தெரியாதா..? என்று தத்துவம் பேசிய நீ இன்று அதை மறந்து விட்டாயா? யோசித்துப் பார்" என்றாள் அர்ச்சகா.

**19. உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று**

**அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்**

**எங்கள் பெருமான் உனக்கென்று உரைப்போம் கேள்**

**எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க**

**எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க**

**கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க**

**இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்**

**எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்.**

"உனது கையில் உள்ள பிள்ளை உனக்கே அடைக்கலம் என்ற அந்தப் பழமொழியை புதுப்பிக்கவும் நாங்கள் அஞ்சுகிறோம். ஏனென்றால் அது தேவையில்லை. எங்கள் பெருமானே, உனக்கு ஒன்று சொல்கிறோம். கேட்பாயாக, நாங்கள் உன்னுடைய மெய்யன்பர்களையே திருமணம் செய்து கொள்வோம். அதனால் எமது கணவன்மாருடன் சேர்ந்து உனக்குப் பணி செய்வோம். இரவும் பகலும் எவ்வேளையிலும் உன்னை நாங்கள் காணவேண்டும். இந்தப் பெரும் வாய்ப்பை இறைவா, நீ எங்களுக்குக் கொடுத்தருளினால் சூரியனே திசைமாறி உதித்தாலும், அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அழகிய எமது தோழியே இப்பெருநிலையை ஏற்றுக் கொள்வாயாக. மாதுமையே, சிவனுக்குத் தொண்டு செய்பவனையே. நாம் திருமணம் செய்தல் வேண்டும்.

சிவநினைவே இல்லாத ஒருவனை எமது தோழியான ஆரணி காதலித்துத் திருமணம் செய்தாள். அப்போது அவள், "எனது சொற்படி தான் எனது காதலன் வாழ்வார். அவரை நான் திருத்துவேன். சிவநினைவில்லாத பலர் இப்போது திருந்திச் சிவனை ஆராதிக்கின்றனர். இதை நீ அறியவில்லையா? என்று கேட்டவள். திருமணம் செய்யுமுன் ஆயிரம் சத்தியம் பண்ணிய அவன் திருமணத்திற்குப் பின்பு ஆரணியைக் கோவில் பக்கமே விடுவதில்லை. அப்படிச் சிவப்பற்றில்லாத ஒருவனை விரும்பிவிட்டாயோ..? அவன்தான் உன்னைக் கோவிலுக்குச் செல்ல வேண்டாம் என்று சொன்னவனோ..? சங்கரன் கறுப்பு என்பதால் அம்பிகா அவனைத் திருமணம் செய்ய மறுத்தவள். வரதனை ஏசியவள். இப்போ மனம் மாறிச் சங்கரனையே திருமணம் செய்ய விரும்புகிறாள். ஏனென்றால் தன்னைத் திருமணம் செய்பவன் தன்னுடன் சேர்ந்து சிவனை வணங்க வேண்டும் என்பதற்காக. சிவப்பற்றில்லாத ஒருவனுடன் வாழ்வது நரகத்தில் வாழ்வதைப் போன்றது. என்று அம்பிகாவுக்குப் புத்திமதி சொன்ன நீ இன்று அதை மறந்து விட்டாயே. அதற்குக் காரணம் சிவப்பற்றில்லாதவனை" விரும்புவதோ..? என்று பலமாகக் கேட்டாள் அர்ச்சகா.

**20. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்**
**போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்**
**போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்**
**போற்றி மால்நான்முகனும் காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.**

"சிவனே, அனைத்திற்கும் பேரின்ப வாழ்வான முத்திக்காக உன்னைப் போற்றுகின்றோம் அருள்புரிவாயாக. அனைத்திற்கும் பிந்தியிருக்கும் உன்னைப் போற்றுகின்றோம் அருள்புரிவாயாக. உயிர்கள் அனைத்திற்கும் பிறப்பிடமாக இருக்கும் உன்னைப் போற்றுகிறோம். உயிர்களுக்கு இருப்பிடமாக இருந்து இன்பம் தருகின்ற உன்னைப் போற்றுகிறோம். அரிக்கும் அயனுக்கும் விளங்காது மறைந்திருக்கும் உன்னைப் போற்றுகின்றோம். எம்மை ஆட்கொண்டு அருள்கின்ற

உன்னைப் போற்றுகின்றோம். நாங்கள் மார்கழி நீராட அனுக்கிரகம் செய்த உன்னைப் போற்றுகின்றோம். எமது தோழியே இதை ஏற்றுக்கொள். அவற்றை நினைத்துப் பார்” என்றாள் சிவதர்சினி.

தோழியர்களது ஆரவாரங்கேட்டு வெளியே வந்த மாதுமை தான் சொன்னபடி நேரத்திற்கு எழுந்து வரமுடியாமையை எண்ணினாள். அப்போது அர்ச்சகா சொன்னாள்; “பகலில் காணும் போதெல்லாம் சிவனைப் போற்றிப் புகழ்வாய் இரவானதும் மறந்து விடுவாய். மறக்காவிட்டால் அயர்ந்து தூங்குவாயா..?”

“நான் என்னடி செய்வது, சிவநினைவோடுதான் படுத்தேன். அதனால் போலும் சிவனும், உமையும், பாம்பும், எருதும், புலியும், காளையும் என் கனவில் வந்துவிட்டன. அவற்றைப் பிரிய முடியவில்லை. நீங்கள் அழைப்பது கேட்கிறது. ஆனால் எழும்ப முடியவில்லை. உங்களோடு சேர்ந்து சிவனைப் போற்றிப் பாடிக் கொண்டே இருந்தேன். இறுதியாக அம்மை; “எழுந்து சென்று தோழியரோடு எம்மைப் போற்றிப் புகழ்ந்து நீராடு” என்ற பின்புதான் எழும்ப முடிந்தது” என்றாள் மாதுமை.

திருச்சிற்றம்பலம்